
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2007
ரூ. 5.00





## ஈழம்

தொடரும் சிங்கள இனவெறி பாசிசம்

## அனாதைகளாகும் தமிழ் மக்கள்

படிப்பகம்

www.padippakam.com

## தகவல் தொழில்நுட்பத் துறையில் சி.ஐ.டி.யு.வின் "மன்றம்"

# ஜாடிக்கேத்த மூடி!

**கை** நிறைய சம்பளம்; வேலை செய்து கொண்டே மேலும் படித்து முன்னேறலாம்; அதிருஷ்டமிருந்தால் அமெரிக்காவுக்கே போய்விடலாம் என்று பத்திரிகைகளால் பிரமையூட்டப் படும் தகவல் தொழில்நுட்பத் துறை யில் பணியாற்றும் ஊழியர்கள், கொத் தடிமைகளை விடக் கேவலமான நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். நாளொன்றுக்கு 10-12 மணிநேர வேலை, விடுமுறை நாட்களை ரத்து செய்வது, திடீர் வேலை நீக்கம், உத்தர வாதமற்ற வேலை, இது தவிர பாலியல் தொந்தரவுகள் என்பவை யெல்லாம் 'கால்சென்டர் கள்' எனப்படும் நவீன கொத்தடிமைக் கூடாரங்க ளின் பொது விதிகள்.

இருப்பினும், இத்தக வல் தொழில்நுட்பத் துறையில் இக்கொத்தடி மைத்தனத்திற்கு எதிராகத் தொழிற்சங்கம் அமைப்ப தென்பதைப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதி ரான பயங்கரவாத நடவ டிக்கை போலச் சித்தரித்து வருகிறது, அரசு. இராணு வம், போலீசுக்கு அடுத்த படியாக சங்கம் அமைக் கக்கூடாத துறை, தகவல் தொழில்நுட்பத் துறை என்பது எழுதப்படாத விதியாகவே உள்ளது. பெங்களூர் கால் சென்ட ரில் பணியாற்றிய பிர தீபா என்ற இளம்பெண் பாலியல் வன்புணர்ச் சிக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம்; சென்னையில் ஐ.கியூ.நெட் என்ற பி.பி.ஓ. நிறுவனத்தில் 2 மாதங்களாக செய்த வேலைக்குச் சம்பளம் கேட்ட ஊழியர்களை ஆபாசமாகத் திட்டி மிரட் டிய சம்பவம் - என அடுத் தடுத்து கால்சென்டர் சொர்க்கங்களின் இருண்ட பகுதியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த போதிலும் இதுவரை சங்கமோ, ஊழியர் நலச் சட்டங்களோ உருவாக் கப்படவில்லை.


இத்தொழிலில் நாடெங்கும் ஏறத் தாழ பத்து லட்சம் பேர் பணியாற்றிய போதிலும், வேலை பளு - தாறுமா றான வேலைநேரம் முதலானவற்றால் உடல்நலக் கோளாறுகள் ஏற்பட்ட போதிலும், இந்த ஊழியர்கள் இன்ன மும் கனவுகளிலேயே மிதக்கின்றனர். இவர்கள் தங்களை நவீன கூலித் தொழி லாளிகளாகக் கருதுவதுமில்லை. தங் களை மேட்டுக்குடியினராகக் கருதிக் கொள்ளும் ஆளும் வர்க்கச் சிந்தனை தான் இவர்களிடம் நிலவுகிறதேயொ ழிய, தகவல் தொழில்நுட்பத் துறையில் நிலவும் கொத்தடிமைத்தனத்திற்கு எதி ராகப் போராட வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் இல்லை.

இத்தகையோரிடம் அரசியல் உணர்வூட்டி அமைப்பாக்குவதென் பது இடர்ப்பாடுகள் நிறைந்த பணி. பல் வேறு இடதுசாரி - ஜனநாயக சக்திகள் இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வரு கின்றன. இந்நிலையில், சி.பி.எம். கட்சி யின் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு. அண்மையில் கொல்கத்தா நகரில், தக வல் தொழில்நுட்பத் துறை ஊழியர்களுக்கான சங்கம் ஒன்றைக் கட்டிய மைத்துள்ளது. இத்துறை யில் சங்கமே இல்லாமல் கொத்தடிமைத்தனம் நில வும் சூழலில், முதன் முறையாக ஒரு சங்கம் உருவாகியிருப்பதை பல ரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். இனி விடி வுகாலம் பிறந்து விடும் என்று நம்பினார்கள்.

ஆனால், நீண்ட நாட் களாக வாய் பேசாமல் இருந்த கைக்குழந்தை, திடீரென ஒருநாள் வாய் திறந்து "எப்போ அம்மா தாலியறுப்பே?" என்று தாயைப் பார்த்து கேட்ட கதையாகி விட்டது, போலி கம்யூனிஸ்டுகள் உருவாக்கியுள்ள சங்கம். இல்லையில்லை; இது சங் கமில்லை; இதற்குப் பெயர் "மன்றம்" (அசோ சியேஷன்) என்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள். மே.வங்க மாநில சட்டப் படி, பொறியாளர்கள் சங் கம் கட்ட முடியாது என்ப தால், "மன்றம்" தொடங் கியுள்ளோம் என்கிறார்,

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

**தகவல் தொழில்நுட்ப சேவை மன்றத்தை கொல்கத்தாவில் தொடங்கி வைத்துக் கொண்டாடும் சி.ஐ.டி.யு. மே.வங்க மாநிலத் தலைவர் சியாமல் சக்கரவர்த்தி. (இடமிருந்து இரண்டாவது).**






படிப்பகம்

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 22**

**இதழ் 3**

**ஜன. 2007**

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ.5.00**
**ஆண்டுசந்தா: ரூ.60.00**

***வெளிநாடுகள்***
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**
**தொலைபேசி: 94446 32561**


# ஈழம்: தொடரும் சிங்கள இனவெறி பாசிசம்! அனாதைகளாகும் தமிழ் மக்கள்!

''தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு சிங்களத் தலைவர்கள் நீதியான தீர்வினை ஒருபோதும் முன் வைக்கமாட்டார்கள் என்பது இன்று தெள்ளத் தெளிவாகியுள்ளது. ஆகவே, நடக்க முடியாத விடயத்தில் நம்பிக்கை வைத்து, அதே பயனற்ற பழைய பாதையில் நடப்பதற்கு நாம் தயாராக இல்லை. சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தமிழீழ மக்களுக்கான தனியரசு என்பதைத்தவிர வேறு ஒரு தெரிவினையும் விட்டு வைக்கவில்லை'' என்று விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தனது பிறந்தநாளான மாவீரர் எழுச்சி நாள் உரையில் அறிவித்திருக்கிறார்.

இதன் மூலம், ஒரு பக்கம் ஈழத்தமிழர்களை கொன்று குவிக்கும் பேரழிவுப் போரை நடத்திக் கொண்டே மறுபக்கம் அமைதி வழித்தீர்வு காணப் போவதாக இரட்டை நாடகமாடும் சிங்களப் பேரினவாதக் குடியரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சேவைப் போலன்றி பிரபாகரன் வெளிப்படையாகவே போர்ப் பிரகடனம் செய்துள்ளார். இலங்கையில் மீண்டும் மூண்டிருக்கும் இந்தப்போர் இதுவரை கண்டிராத அளவு மூர்க்கமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஈழதேசத்தை மேலும் நாசப்படுத்தும் அவ்வாறான யுத்தமானது இலங்கையின் வடக்கு-கிழக்கோடு நின்றுவிடாது. தென்னிலங்கையின் முக்கியக் குறியிடங்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி, முழுநாடும் பேரழிவுக்குள் சிக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

''சர்வதேச சமூகம்'' என்று சிங்களப் பேரினவாத அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் மதிக்கும் ஏகாதிபத்தியத்தின் நெருக்குதல், சமாதானத்தையும் இயல்பு வாழ்வையும் விரும்பிய ஈழத் தமிழ் மக்கள் மற்றும் சிங்கள மக்களின் யுத்த எதிர்ப்பு நிலை மற்றும் சிங்களப் பேரினவாத அரசியல் சக்திகளிடையே நிலவிய கூர்மையான பிளவு ஆகியவை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் ரணில் விக்ரமசிங்கே மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையிலான போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் சமாதான முயற்சிகள் முன்னெடுப்புக்கும் காரணங்களாக இருந்தன.

ஆனால் இந்த முயற்சிகள் ''நாட்டைப் பிளவுபட வைப்பதாகவும், தமிழ் பயங்கரவாதிகளிடம் சரணடைய வைப்பதாகவும், அந்நிய சக்திகளிடம் இலங்கையின் இறையாண்மையை அடகு வைப்பதாகவும் இருக்கின்றன'' என்று அப்போதைய இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்கா பீதியையும், சிங்கள பேரினவெறியையும் கிளப்பினார். இதில் ஜே.வி.பி. மற்றும் ஜாதிகா ஹெல உறுமய என்ற பௌத்த குருமார்களின் கட்சி ஆகிய சிங்கள பேரின வெறி கடுங்கோட்பாட்டு இயக்கங்களோடு கைகோர்த்துக் கொண்டு, தாம் சிறுபான்மையாக இருந்த நாடாளுமன்றத்துக்கு ஒரு திடீர்த் தேர்தலைக் கொண்டு வந்தார்.

சமாதான முன்னெடுப்புகளில் பிரதமர் ரணில் விக்ரம சிங்கேயின் தடுமாற்றத்தைப் பயன்படுத்திக் கொண்டும், விடுதலைப் புலிகளின் தனிநபர் அழித்தொழிப்பு மற்றும் தற்கொலைப் படைத் தாக்குதல்களை மிகைப்படுத்தியும் பீதியூட்டி சிங்கள பேரின வெறியைக் கிளப்பி 2004 நாடாளுமன்றத் தேர்தல்களிலும 2005 அதிபர் தேர்தலிலும் சந்திரிகா - ராஜபக்சே கும்பல் வெற்றி பெற்றது. விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அரசியல் நிலைப்பாடும் இதற்கு ஒருவகையில் மறைமுகமாக உதவியிருக்கிறது. போர்நிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஈழத்தில் தாம் தலைமை வகிக்கும் ஒரு இடைக்கால நிர்வாகத்துக்கு வழிவகுக்கும், மேலைநாடுகளின் உதவியாக வரவிருந்த வளர்ச்சிப் பணிகளில் தமக்கு முக்கியப் பங்கு இருக்கும் என்றெல்லாம் எதிர்பார்த்த விடுதலைப் புலிகள் இயக்கம் அவ்வாறான வாய்ப்புகள் மறுக்கப்படுவதை 2002-2003-ஆம் ஆண்டே உணர்ந்தது.

கிழக்கில் தளபதி கருணாவின் தலைமையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிளவு ஏற்பட்டு கணிசமான அளவு நிதியையும் ஆயுதங்களையும் படையணியையும் இழந்தது, அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் புலிகளுக்குப் பின்னடைவைக் கொடுத்தது. சுனாமி பேரழிவைத் தொடர்ந்து வந்த நிவாரணப் பணிகள் மற்றும் மறுகட்டுமான வேலைகளில் விடுதலைப் புலிகளைப் பங்கேற்க விடாமல் விலக்கி வைப்பதில் ஜே.வி.பி. மற்றும் ஜாதிகா ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் நெருக்குதல்களை இலங்கை அரசு அப்படியே ஏற்றுக் கொண்டபோதே, இனி சமாதான முயற்சிகள் எவ்வித பலனுமளிக்காது, ''விடுதலைப் போர் ஒன்றே வழி'' என்ற முடிவுக்கு புலிகள் வருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாய் அமைந்தது. இவ்வாறான

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

www.padippakam.com

# பெரியார் சிலை உடைப்பு:

# மண்டைச் சுரப்பை உலகு தொழும்! மானமிழந்தால் மதவெறியில் தமிழகமும் விழும்!!

டிசம்பர் 6, பாபர் மசூதி இடிக்கப்பட்ட கருப்பு நாளன்று சிறீரங்கம் பெரியார் சிலையை உடைக்க வேண்டும் என்பதுதான் பார்ப்பன இந்து மதவெறியர்களின் திட்டம். ''டிசம்பர் 6 இந்தியாவின் அடிமைச் சின்னம் அகற்றப்பட்ட நாள்! இந்துக்களின் வெற்றித்திரு நாள்!'' என்று அறிவிக்கும் சுவரொட்டிகள் முன்னெப்போதும் இல்லாத அளவு திருச்சியைச் சுற்றிலும் ஒட்டப்பட்டிருந்தன. இது ஒரு வகையில் சிலை இடிப்புக்கு எதிரிகள் வழங்கிய முன்னறிவிப்பு.

1973-இலேயே சிறீரங்கம் நகரமன்றம், பெரியார் சிலைக்காக 144 சதுர அடி நிலத்தை ஒதுக்கிக் கொடுத்து, அந்த இடம் பெரியார் சுயமரியாதை இயக்கத்தின் பெயரில் பட்டா செய்யப்பட்டுள்ள போதிலும், 33 ஆண்டுகளாக அங்கே சிலை நிறுவப்படவில்லை. இந்த 33 ஆண்டுகளில் பெரியாரின் பெயரில் டஜன் கணக்கிலான நிறுவனங்கள் பல நூறு ஏக்கர் பரப்பில் தமிழகமெங்கும் எழும்பியிருக்கின்றன. ஆனால், இந்த 144 சதுர அடியில் பெரியார் சிலை மட்டும் எழும்பவில்லை. இந்தத் தாமதத்திற்கு பகுத்தறிவு சார்ந்த விளக்கம் எதுவும் நமக்குப் புலப்படவில்லை.

ஆனால், சிலை எழும்பவிருக்கிறது என்று தெரிந்ததும் பார்ப்பனக் கும்பல் ஒரு கணமும் தாமதிக்கவில்லை. நவம்பர் 28-ஆம் தேதியன்று, திருவரங்கத்தின் புனிதம் காப்போர் கூட்டமைப்பு என்ற பெயரில் பார்ப்பன இந்து மதவெறி அமைப்புகள் ஒன்றிணைந்தன. டிசம்பர் 5-ஆம் தேதியன்று கோவையில் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்த இந்து ஆசார்ய சபாவின் தலைவர் தயானந்த சரஸ்வதி, ''பெரியார் சிலைக்கு ஸ்ரீரங்கம் பாதுகாப்பான இடம் அல்ல'' என்று பகிரங்கமாக மிரட்டினார். டிசம்பர் 6-ஆம் தேதி பின்னரவில் கோவையிலிருந்து அனுப்பப்பட்ட இந்துமதவெறிக் காலிகள் பெரியார் சிலையை உடைத்தனர்.

இதற்குப்பின் அங்கே நடைபெற்ற சம்பவங்கள், பெரியாருக்கு எதிரிகள் செய்த அவமதிப்பைக் காட்டிலும் கொடிய அவமதிப்பாக இருந்தன. சிலை உடைப்பு பற்றிய செய்தி கேள்விப்பட்டு, திருச்சி நகரத்திலிருந்து மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்களும் புரட்சிகர மாணவர் இளைஞர் அணித் தோழர்களும் சிறீரங்கத்திற்கு வந்து சேர்ந்தபோது சிறீரங்கம் இயல்பாக இயங்கிக் கொண்டிருந்தது. விபத்து நடந்த இடத்தைப் போல ஒரு கூட்டம் பெரியார் சிலையைச் சுற்றி நின்று கொண்டிருக்க, கருப்புச் சட்டைத் தொண்டர்கள் நடந்ததை விளக்கிக் கொண்டிருந்தார்கள். மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டு முகத்தில் அதிர்ச்சியைத் தேக்கியவாறு நின்று கொண்டிருந்த பார்ப்பனர்களும் கேதம் கேட்க வந்த இந்தக் கூட்டத்தில் அடக்கம்.

இந்த மானக்கேட்டைக் காணப் பொறுக்காத ம.க.இ.க. தோழர்கள், தி.க. தொண்டர்களைக் கடிந்து கொண்ட பிறகுதான் சாலை மறியல் தொடங்கியது. கடைகள் அடைக்கப்பட்டன. சாலை மறியலைத் திமிர்த்தனமாக மீற முயன்ற சில தனியார் பேருந்துகள் நொறுக்கப்பட்டன. ''ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறி அமைப்புகளைத் தடைசெய்! சிலை உடைப்பைத் தூண்டிய அதன் தலைவர்களைக் கைது செய்!'' என்று முழங்கியபடி ம.க.இ.க. மாவட்டச் செயலர் தோழர் இராமதாசு தலைமையில் கோயில் ராஜகோபுரத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. தி.க., தி.மு.க. அணிகளும் பொதுமக்களும் ஊர்வலத்தில் இணைந்து கொண்டனர்.

போராட்டம் பரவத் தொடங்குகிறது என்று அறிந்தவுடனே தி.மு.க., தி.க. கரை வேட்டிகள் களத்தில் இறங்கினார்கள். ''நடப்பது நம்ம ஆட்சி. சிலை உடைத்தவர்கள் கைது செய்யப்பட்டு விட்டனர். இந்தச் சிலை இல்லாவிட்டால் வேறு சிலை. எல்லாவற்றையும் கலைஞர் பார்த்துக் கொள்வார்'' என்று சொல்லி, கருஞ்சட்டைத் தொண்டர்களைக் கலைத்துவிட்டார்கள். மானக்கேடான சகஜநிலை மீண்டும் திரும்பியது.

எனினும், பெரியார் சிலையை திருட்டுத்தனமாக

**இந்து தேசிய நாயகன் இராமனுக்குச் செருப்பு மாலை அணிவித்து, ஒசூரில் பு.ஜ.தொ.மு. நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.**





படிப்பகம்

www.padippakam.com

உடைத்த பார்ப்பன மதவெறியர்களுக் கான பதிலடி அன்று மாலையே பகிரங் கமாகக் கொடுக்கப்பட்டது. ஆர்.எஸ்.எஸ்-இன் தேசிய நாயக னான இராமனின் படத்துக்கு செருப்பு மாலை அணிவித்து, செருப்பால் அடித் தபடியே, சிறீரங்கம் பேருந்து நிலையத் திலிருந்து பெரியார் சிலையை நோக்கி ஊர்வலமாக முழக்கமிட்டு வந்தார்கள் ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள். பெரியார் பற்றாளர்கள் பலர் தாமா கவே ஊர்வலத்தில் இணைந்து கொண் டனர். இருபுறமும் நூற்றுக்கணக்கான மக்கள் நின்று இந்தக் காட்சியைத் தரி சித்தனர். பரவசமடைந்த ஒரு முதிய தி.க. தொண்டர் தம் கால் செருப்பைக் கழற்றி அடித்து இராமபிரானுக்கு அஞ் சலி செலுத்தினார்.




திருச்சி - சிறீரங்கத்தில், பார்ப்பன உயர்வருணத்தினரின் சாதி சங்கத் தலைவன் இராமனின் படத்தைச் செருப்பால் அடித்தும் எரித்தும் ம.க.இ.க. நடத்திய ஆர்ப்பாட்டம்.

வருணாசிரமத்தின் பாதுகாவலான இராமனின் படத்தை, சேதமடைந்த பெரியார் சிலையின் காலடியிலேயே தீ வைத்துக் கொளுத்தினார்கள் தோழர் கள். படத்தைப் பிடுங்க முயன்ற போலீசை நெருங்கவிடாமல் தடுத்தார் கள் தி.க. இளைஞர்கள். தோழர்களைக் கைது செய்தவுடனே விடுதலை செய் யக் கோரி விண்ணதிர முழங்கினார் கள். பிரச்சினை பெரிதாகிவிடும் என்று உணர்ந்து கொண்ட போலீசு தோழர் களை அன்றிரவே விடுவித்தது.

''உங்களுக்கெல்லாம் ரொம்ப நன் றிம்மா, நீங்களாவது மானத்தக் காப் பாத்தினீங்க'' என்று பெண் தோழர்களி டம் நா தழுதழுக்க நன்றி கூறினார், ஒரு முதிய தி.க. தொண்டர். திராவிடர் கழ கத்தின் மாநில நிர்வாகியோ, ''தயவு செய்து இதற்கு மேலும் எதையாவது செய்து சட்டம் ஒழுங்குப் பிரச்சி னையை உருவாக்கி விடாதீர்கள்'' என்று தோழர்களைக் கைக்கூப்பிக் கேட்டுக் கொண்டார். சொரணையுள்ள வர்களால் இந்தக் கோரிக்கைக்கு செவி சாய்க்க முடியாதென்பதால் போராட் டம் தொடர்ந்தது. மாநிலமெங்கும் கண் டனச் சுவரொட்டிகள் அன்றிரவே ஒட் டப்பட்டன.

மறுநாள் ஓசூரில் பாரதிய ஜனதா கட்சி அலுவலகத்தின் எதிரில் இராம னின் படத்தைத் தீக்கிரையாக்கினார் கள் பு.ஜ.தொ.மு. தோழர்கள். நூற்றுக்க ணக்கான மக்கள் பார்த்து நிற்க, நகரின் மையப்பகுதியில் நடைபெற்றது இந் தப் போராட்டம். போராட்டம் முடிந்து அரைமணி நேரத்துக்குப்பின், பா.ஜ.க.வின் மாநிலப் பொருளாளர் நரேந்திரன் தலைமையிலான 20 பேர் கொண்ட கும்பல், அந்த வழியே தன் மனைவி குழந்தையுடன் சென்று கொண்டிருந்த பு.ஜ.தொ.மு.வின் செய லர் தோழர் பரசுராமனை சுற்றி வளைத் துக் கொண்டது. ''இவனைக் கொலை செஞ்சாத்தாண்டா நாம் நிம்மதியா இருக்க முடியும்'' என்று கூச்சலிட்டுக் கொண்டே அவரை உருட்டுக் கட்டை களால் தாக்கியது. ஆர்.எஸ்.எஸ். பேடி கள் நடத்திய இந்தக் கோழைத்தனமான தாக்குதலைத்தான் ''இந்துக்களின் கோபம்'' என்று பொய்யாகச் சித்தரித் தன சில நாளேடுகள்.

மண்டை பிளந்து மயங்கி விழுந்த பரசுராமனை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார் அவருடைய மனைவி தமிழ்ச்செல்வி. ஒரு மணி நேரத்திற்குள் மாவட்ட மருத்துவம னைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று மருத்துவர்கள் கூறவே, ஆம்பு லன்சில் தருமபுரிக்கு அவரைக் கொண்டு செல்ல முயன்றபோது வழிம றித்து அனைவரையும் கைது செய்தது போலீசு. இரவு முழுவதும் தோழர் பரசு ராமனையும் அவரது மனைவியையும் ஆம்புலன்சிலேயே பூட்டி வைத்தது. பொதுச் சொத்துக்கு சேதம் விளைத் தார், சதி செய்தார் என்று பல பிரிவுக ளில் பொய்வழக்கு பதிவு செய்து, விடிந்ததும் சேலம் சிறைக்குக் கொண்டு சென்றனர். கடும் போராட்டத் துக்குப் பின்னர்தான் சேலம் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று அங்கே யும் கால்களில் விலங்கு மாட்டி வைத்த னர். கொலைவெறித் தாக்குதல் நடத் திய பா.ஜ.க.வினர் கைது செய்யப்பட வில்லை என்பதுடன், பரசுராமனைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறை வைக்கப் போவதாக அறிவித்திருக்கி றார், மாவட்ட போலீசு கண்காணிப் பாளர் தேன்மொழி.

இதேபோல, சிவகங்கையில் சிலை உடைப்புக்கு எதிராகக் கண்டனச் சுவ ரொட்டி ஒட்டியதற்காகத் தோழர் எழில் மாறன், சுவரொட்டியை அச்சிட்ட அச் சக உரிமையாளர், வழக்குரைஞர் ஆகி யோர் மீது வகுப்பு மோதலைத் தூண்டி யதாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக் கிறது. திருச்சியில் கண்டனச் சுவ ரொட்டி ஒட்டிய இளம் தோழர் கார்க்கி ஒரு வாரம் சிறை வைக்கப்பட்டிருக்கி றார்.

பெரம்பலூர், சங்கராபுரம், ஈரோடு போன்ற பல இடங்களில் பூணூல் அறுப்பு, சாமி சிலை உடைப்பு நடவ டிக்கைகளில் ஈடுபட்டதற்காகப் பெரி யார் தி.க.வைச் சேர்ந்த தொண்டர்கள் பலர் சிறை வைக்கப்பட்டிருக்கிறார் கள். சென்னை அயோத்தியா மண்டபத் தின் மீது தாக்குதல் நடத்தியதாக பெரி யார் தி.க.வினர் மீது பொய் வழக்கு போடப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் பெரியார் சிலை உடைப்பை எதிர்த்த நடவடிக்கைளில் ஈடுபட்டதற்காக சிறையில் இருப்பவர்கள் ம.க.இ.க.வைச் சேர்ந்த தோழர்களும் பெரியார் தி.க. தோழர்களும் மட்டுமே.

16.12.06 அன்று சிறீரங்கத்தில் வெண்கலத்தினாலான பெரியார் சிலை திறக்கப்பட்டு விட்டது. அந்த நிகழ்ச்சி யில் பேசிய தி.க. பொதுச்செயலர் வீர மணி, எதிர்த்துப் போராடிக் கைது செய் யப்பட்ட தோழர்களை விடுவிக்க வேண்டுமென வாய்தவறிக் கூடப் பேச வில்லை. கலைஞர் ஆட்சியை காப் பாற்றும் விதத்தில் போராட்டம் ஏதும் செய்யாமல் அமைதி காத்த தொண்டர் களுக்கு மட்டும் நன்றி கூறினார்.



படிப்பகம்

பெரியார் சிலை உடைப்பின் நோக்கம் என்ன? கலைஞர் அரசுக்கு களங்கம் கற்பிப்பதும், நெருக்கடி கொடுப்பதும்தான் இந்தச் சிலை உடைப்பின் நோக்கமாம். வீரமணி, திருமா போன்றோரின் கண்டுபிடிப்பு இது. சிலையை உடைத்தால் கட்டுப்பாடில்லாத பெரியார் தொண்டர்கள் பூணூல் அறுப்பு, இராமன் எரிப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களாம். இதைக் கீாட்டி நம்மாளின் ஆட்சியைக் கலைத்து விடலாம் என்று திட்டம் போட்டுத்தான் அவாள் சிலையை உடைத்தார்களாம்.

கேட்பதற்கே கேவலமாக இருக்கும் இந்த விளக்கத்தைச் சொல்வதற்கு தி.க., தி.மு.க.வினர் கூச்சப்படவில்லை. 2000 முஸ்லிம்களின் ஈரக்குலையறுத்த மோடியின் ஆட்சியே கலையவில்லையே, கேவலம் பத்தாம் நம்பர் நூலை அறுத்தால் ஆட்சி கவிழ்ந்துவிடுமா என்ற கேள்வி அவர்களுடைய பகுத்தறிவுக்கு எட்டவில்லை போலும்!

இவர்களுடைய விளக்கத்தின்படி நம்மாளின் ஆட்சியைக் காப்பாற்ற வேண்டுமானால், அவாளின் பூணூலையும் இராமபிரானையும் காப்பாற்றியாக வேண்டும். அதற்கு கருப்புச் சட்டைகளைத்தான் காவலுக்கு நிறுத்த வேண்டும். கிட்டத்தட்ட அதுதான் நடந்தது. பூணூல் அறுப்பும் இராமன் எரிப்பும் நடக்கத் தொடங்கிய பின்னர்தான் தேசியப் பாதுகாப்புச் சட்டம் பற்றிப் பேச ஆரம்பித்தார் டி.ஜி.பி. பெரியார் சிலை உடைப்புக்குச் சதித்திட்டம் தீட்டித் தூண்டிவிட்ட தயானந்த சரஸ்வதி மீது வழக்கு இல்லை. ஒசூர் தோழர் பரசுராமன் மீது 120 ஏ சதிவழக்கு. பாபர் மசூதி இடிப்பைக் கொண்டாடி சுவரொட்டி ஒட்டிய ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்மீது வழக்கு இல்லை. பெரியார் சிலை உடைப்பைக் கண்டித்து சுவரொட்டி ஒட்டிய சிவகங்கைத் தோழர்கள் மீது வகுப்பு மோதலைத் தூண்டியதாக வழக்கு!

''பெரியார் ஆட்சி''யின் நடவடிக்கையைப் பார்ப்பனக் கும்பலின் நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்! ''பெரியார் சிலையைச் சட்டபூர்வமான முறையில்தான் அகற்றியிருக்க வேண்

# அறுப்பதும் எரிப்பதும்தான் வன்முறையா?

''ஆத்திகர்கள் திரளும் கோயில் வாசலில் ஒரு நாத்திகரின் சிலையை வைக்கலாமா?'' — இது பெரியார் சிலைக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் முக்கியமான வாதம். ஆத்திகர்கள் திரளும் இடத்தில் நாத்திகம் பேசக்கூடாது என்று கூறுவது கருத்துரிமையை மறுக்கும் பாசிசம். ''குடி குடியைக் கெடுக்கும்'' என்று சாராயக் கடை வாசலில் எழுதி வைக்காமல், சர்பத் கடை வாசலிலா எழுதிப் போட முடியும்? ஆத்திகர்கள் கூடுமிடத்தில் நாத்திகப் பிரச்சாரம் செய்வதுதான் பொருத்தமானது. சிறீரங்கம் கோயிலைச் சுற்றி பிராந்திக் கடைகளும், ஆபாசப் பத்திரிகைகளும், நீலப்பட வியாபாரமும் நடக்கிறதே, அவையெல்லாம் ஆத்திகப் பிரச்சார நடவடிக்கைகளா என்ன?

மேலும், பெரும்பான்மை என்பதனாலேயே ஒரு கருத்து நியாயமாகிவிடாது. பாப்பாபட்டியில் ''தலித்துகள் ஊராட்சித் தலைவராகக் கூடாது'' என்று தடுத்தவர்கள் கூடப் பெரும்பான்மை பலத்தைக் காட்டித்தான் தங்கள் சாதிவெறியை நியாயப்படுத்தினார்கள். ''பெரும்பான்மை இந்துக்கள் வாழும் இடத்தில் சர்ச், மசூதி கட்டக்கூடாது'' என்ற ஆர்.எஸ்.எஸ்.இன் வாதத்திற்கும், ''பெரியார் சிலை கூடாது'' என்பதற்கும் அடிப்படையில் எவ்வித வேறுபாடும் இல்லை. இது ஆத்திக வேடம் போடும் பார்ப்பன மதவெறி, இறைநம்பிக்கை உள்ள பெரும்பான்மை தமிழக மக்கள், பிள்ளையாரையும், பெருச்சாளியையும் காட்டிக் கட்சி நடத்தும் பா.ஜ.க.வை நிராகரித்திருக்கும்போது, தன்னைப் பெரும்பான்மையின் பிரதிநிதியாகக் கூறிக் கொள்வதற்கு அவர்களுக்கு எந்த அருகதையும் இல்லை.

''தமிழ் வழிபாடு கூடாது, பார்ப்பனரல்லாதார் அர்ச்சகராகக் கூடாது'' என்று பெரும்பான்மை மக்களை அவமதிக்கும் இந்து முன்னணிக் கும்பல், பெரும்பான்மை ஆத்திகர்களுக்காகக் கவலைப்படுவது போல நடிக்கிறது. ஆனால், பெரும்பான்மையான சூத்திர-பஞ்சம சாதி மக்களைக் கோயிலுக்குள் விட மறுத்த இந்த பார்ப்பன, சாதிவெறியர்களை எதிர்த்துக் கோயில் நுழைவு உரிமைக்காகப் போராடியவர் பெரியார். அவர் சிலையை எல்லாக் கோயில் வாசல்களிலும் வைக்கவேண்டும். அதுதான் பொருத்தம்.

''சர்ச் வாசலில் பெரியார் சிலை வைப்பதுதானே!'' என்கிறார் இராம.கோபாலன். ஆசையிருந்தால் அவரே வைக்கட்டும். பெரியார் சிலைக்குக் கீழே இந்துக் கடவுள் இல்லை என்றா எழுதியிருக்கிறது? எந்தக் கடவுளும் இல்லை என்றுதான் சொன்னார் பெரியார். எனவே, எந்தக் கடவுளும் இல்லாத ஒரு தூணையோ துரும்பையோ இராம.கோபாலன் காட்டட்டும். அங்கே சிலை வைத்து விடுவோம்.

''பெரியார் சிலையை உடைத்தால் அதற்காக இராமபிரானின் படத்தை ஏன் கொளுத்துகிறார்கள்? அதற்கும் இதற்கும் என்ன சம்மந்தம்?'' என்று கேட்கிறார் இராம.கோபாலன். இராமன் எல்லா இந்துக்களுக்குமான கடவுளல்ல. பார்ப்பன உயர் வருணத்தினரின் சாதிச்சங்கத் தலைவன். இதற்கு ஆதாரம் வால்மீகி இராமாயணம். வருணதருமத்தை நிலைநாட்டும் இராமராச்சியத்தை நடத்தியதற்காகத்தான் அவன் கொண்டாடப்படுகிறான்.


மேலும், இராமன்ஜி என்பவர் அத்வானிஜி, வாஜ்பாயிஜி ஆகியோரைக் காட்டிலும் மூத்தவர். எல்லாத் தேர்தல்களிலும் தாமரைச் சின்னத்துக்கு ஓட்டு வேட்டையாடும் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர். இராமன் தேசிய நாயகன் என்பதால் முஸ்லிம்களும் அவனை வணங்க வேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ்.இன் நிலைப்பாடு. எனவே, அவர்கள் கூற்றுப்படியே இராமன் இந்துக் கடவுள் அல்ல என்று ஆகிறது. பெரியாரின் சிலையை அவாள் உடைக்கும்போது, அவாளுடைய கட்சித் தலைவரின் படத்தைச் செருப்பால் அடித்துக் கொளுத்துவதுதான் பொருத்தமான எதிர்ப்பு நடவடிக்கையாக இருக்க முடியும். இராமனைக் கடவுளாக் கருதும் பக்தர்கள் ஒருவேளை மனம் வருந்தினால், சாதியைப் பாதுகாக்கும் இந்தக் கடவுளைக் கைவிட்டு விடுமாறு அவர்களுக்கு நாம் புத்தி சொல்லலாம். புத்தி வந்தால் பக்தி தானே போய்விடும்.

''பூணூலை அறுப்பது தனிநபரின் உரிமையையும் மத உரிமையையும் மீறும் வன்முறை'' என்று அலறுகிறது. பாரதிய ஜனதாக் கும்பல். அறுப்பதும் எரிப்பதும் எதிர் வன்முறைதான். பூணூல் அணிவதுதான் முதல் வன்முறை. பூணூல் என்பது அவரவர் விருப்பப்படி அணியும் கலர் சட்டையோ, அல்லது ஒரு மதத்தினர் அனைவரும் அணியும் சிலுவை போன்ற சின்னமோ அல்ல. பூணூல் - பெரியாரின் மொழியில் சொன்னால், ஒரு தெருவில் ஒரேயொரு வீட்டுக் கதவில் ''இது பத்தினி வீடு'' என்று எழுதிப் போட்டுக் கொள்வதற்கு ஒப்பான நரித்தனம். பெயருக்குப் பின்னால் இருந்த சாதிவாலை நறுக்கியவர் பெரியார். அய்யர், அய்யங்கார் என்ற பட்டங்களை ஃபாஷனுக்காகத் துறந்தவர்கள், பூணூலையும் துறந்துவிட்டால் அவர்களை நாகரிப்படுத்தும் வேலை மிச்சம்!

www.padippakam.com

டும். சட்டவிராதமான முறையில் உடைத்திருக்கக் கூடாது'' என்று பாபர் மசூதி இடிப்புக்கு அத்வானி வருத்தம் தெரிவித்த அதே தோரணையில், பார்ப்பனக் கும்பலைச் சேர்ந்த அனைவரும் சொல்லி வைத்தாற் போல அறிக்கை விட்டனர்.

பாபர் மசூதியை இடித்தபின், ''சர்ச்சைக்குரிய இடம்' என்று அதற்கு ஆர்.எஸ்.எஸ். பெயர் மாற்றம் செய்ததைப் போல, ''சர்ச்சைக்குரிய பெரியார் சிலை'' என்று எழுதத் தொடங்கியது தினமலர். பெரியார் சிலைக்கு இரும்புக் கூண்டு போடச் சொன்னார் இராம. கோபாலன். ''இராமன் எரிப்பையும் பூணூல் அறுப்பையும் தூண்டுவதே கருணாநிதிதான்'' என்று மிரட்டினார் எச்.ராஜா. வைகுந்த ஏகாதசிக்கு சிறீரங்கம் வரும் பக்தர்கள் பெரியார் மீது கல்லெறிந்து காறித் துப்புமாறு தலைமறைவாய் இருந்தபடியே அறிக்கை விட்டார் அர்ஜுன் சம்பத். ''சிலை உடைப்பைத் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்கள் சமூக நல்லிணக்கத்தைக் கெடுத்துவிடும்'' என்று கவலை தெரிவித்தார் கார்ப்பரேட் பார்ப்பான் ரவி சங்கர்ஜி. ''பெரியார் சிலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்'' என்று கூறி வெளிப்படையாகவே களம் இறங்கினார் ஜெயலலிதா. திண்டுக்கல்லில் பெரியார் சிலைக்கு செருப்பு மாலை, தூத்துக்குடியில் தார்பூச்சு, பட எரிப்பு... என ஆங்காங்கே இந்து வெறியர்கள் மேலேறித் தாக்கினர்.



பெரியார் சிலை உடைப்புக்குப் பதிலடியாக, ஈரோட்டில் உள்ள ராகவேந்திரா கோயிலின் மூல விக்கிரகம் உடைக்கப்பட்டது.

பெரியாரின் தொண்டர்கள் என்று கூறிக் கொள்வோர் என்ன செய்தார்கள்? ''இனி பொறுப்பதற்கில்லை; நெருப்புடன் விளையாடதே'' என்று 2 நாள் கழித்து அறிக்கை விட்டார் வைகோ. இதேநிலை தொடர்ந்தால் நாடு தழுவிய போராட்டம் என்று 3 நாள் கழித்து அறிக்கை விட்டார் திருமா. பூணூல் அறுப்பு, இராமன் எரிப்பு போன்ற நடவடிக்கைகளைப் பற்றி பெரிதும் கவலைப்பட்ட 'மார்க்சிஸ்டு' கட்சி கவனத்துடன் செயல்படுமாறு காவல்துறையைக் கேட்டுக் கொண்டது. ''இந்து பாசிச அமைப்புகள் தலைதூக்குகின்றன. எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்'' என்று பயமுறுத்தியது வலது கம்யூனிஸ்டுகளின் கலை இலக்கியப் பெருமன்றம். இது தான் பெரியார் பிறந்த மண்ணின் யோக்கியதை! பெரியாரிஸ்டுகள் எனப்படுவோர் சோளக்கொல்லைப் பொம்மைகளாக இருக்கும்போது, பெரியாரை வெண்கலத்தில் உருக்கி வார்த்து என்ன பயன்?

சிலையை உடைத்ததன் மூலம் பெரியாரைத் தமிழகம் முழுவதும் கொண்டு செல்வதற்கான ஒரு அற்புதமான வாய்ப்பைத் தங்கத்தட்டில் வைத்து வழங்கினார்கள் இந்து மதவெறியர்கள். உடைக்கப்பட்ட பெரியாரின் தலையை தமிழகம் முழுவதும் ஒரு வெடிகுண்டைப் போல ஏந்திச் சென்றிருக்கலாம். தன் வாழ்நாள் முழுவதும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து மறைந்த அந்தக் கிழவனை, இன்னொரு முறை மக்கள் மத்தியில் பிரச்சாரப் பயணம் அழைத்துச் சென்றிருக்கலாம். ''மண்டைச் சுரப்பை உலகு தொழும்'' என்று பாவேந்தர் பாடினாரே, அந்தத் தலையிலிருந்து தோன்றிய சிந்தனையை இளம் தலைமுறையினர் மத்தியில் தீயைப் போலப் பற்ற வைத்திருக்கலாம். சாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு, இந்து தேசிய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு எனப் பன்முகம் காட்டிய அந்தத் தலையை பார்ப்பன மதவெறிக்கெதிரான விடுதலையின் வித்தாய் தமிழகமெங்கும் விதைத்திருக்கலாம்.

பேசாத கல்லையும், களிமண்ணையும் வைத்து அரசியல் நடத்தும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு, பகுத்தறிவுக் கல்லைப் பேச வைத்துக் காட்டியிருக்கலாம். இரும்புக் கூண்டுக்குள் பதுங்க வேண்டியவர் பெரியார் அல்லர். இராம.கோபாலன்தான் என்பதை அந்தப் பார்ப்பனக் கும்பல் பட்டுத் தெரிந்து கொள்ளுமாறு விட்டிருக்கலாம். சிறீரங்கம் கோயிலென்ன, எல்லாக் கோயில் வாசல்களிலும் சாதியையும் மடமையையும் வழிமறிக்கும் தடையரணாகப் பெரியாரின் சிலையை நிறுவியிருக்கலாம்.


இவையனைத்தும் கொள்கை உறுதி கொண்டவர்களின் செயல்முறைகள். ஆட்சியைக் காத்துக் கொள்ளவும் அதன் உதவியுடன் சிலையைக் காப்பாற்றிக் கொள்ளவும் சிந்திப்பவர்கள், கான்கிரீட்... வெண்கலம்... இரும்பு என்று உலோகத்தை உறுதிப்படுத்தும் திசையில்தான் சிந்திக்க முடியும். இறுதியில் அது இரும்புக் கூண்டில் தான் போய் முடியும்.

டிசம்பர் 7-ஆம் தேதியன்று பெரியார் சிலையைப் பாதுகாக்கத் தவறிய பரிதாபத்துக்குரிய 4 போலீசுக்காரர்களைக் கடமை தவறிய குற்றத்துக்காகத் தற்காலிக நீக்கம் செய்திருக்கிறது தமிழக அரசு. தங்கள் கடமையிலிருந்து தவறிய பெரியாரின் தொண்டர்கள் எனப்படுவோருக்கு யார் தண்டனை விதிப்பது?

இதோ, தண்டனையை எதிர் கொள்வதற்குத் தன்னந்தனியாக அங்கே அமர்ந்திருக்கிறார் பெரியார். அவரது சிலையை சட்டபூர்வமாகவே அகற்றுவதற்கான வழக்கைத் தக்க தருணத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக உச்சநீதி மன்றம் கூறியிருக்கிறது. பக்தர்கள் என்ற போர்வையில் கும்பலோடு கும்பலாகச் சேர்ந்து சிலையின் மீது கல்லெறிய தக்க தருணத்திற்காகக் காத்திருக்கிறார்கள் பார்ப்பன இந்து வெறியர்கள். சுயமரியாதை இயக்கத்தின் துவக்கக் காலத்தில் தன்னந்தனியாக சாதி, மத எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து கல்லடியும் சொல்லடியும் வாங்கி, மாபெரும் மக்கள இயக்கத்தைத் தமிழகத்தில் உருவாக்கி நிலைநிறுத்திய பின்னரும், அந்தோ, பெரியார் இன்றும் தனியாகத் தான் அமர்ந்து கொண்டிருக்கிறார், சிறீரங்கம் கோயிலுக்கு எதிரே அரங்கநாதனுக்கு சவால்விட்டபடி!

● சூரியன்

www.padippakam.com



# ‘மார்க்சிஸ்டுகள்’: பார்ப்பன பாதந்தாங்கிகள்!

முற்றும் துறந்த துறவி வேடத்தில் ஹார்லிக்ஸ் ஷியாமளா, ஸ்ரீரங்கம் உஷா என்று பல பெண்களுடன் உல்லாச சல்லாபம் புரிந்து கொண்டு, பக்தர்களுக்கு ஆசீர்வாதமும், பல கருப்புப் பண முதலைகளின் சொத்துக்களுக்குப் பாதுகாப்பும் வழங்கிக் கொண்டிருந்த மோசடிப் பேர்வழிதான் காஞ்சி சங்கராச்சாரி. சங்கர மடத்தின் முன்னாள் விசுவாசியான சங்கரராமன் எனும் பார்ப்பனர், சங்கராச்சாரியின் இந்தக் காமக் களிவெறியாட்டங்களை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தி விடுவாரோ என்று அஞ்சி, கூலிப்படையை ஏவி அவரைக் கொலை செய்த பயங்கரவாதிதான் இந்த சங்கராச்சாரி. அவ்வழக்கில் கைது செய்யப்பட்டு, சில நாட்கள் கம்பி எண்ணிவிட்டு, தற்போது பிணையில் உள்ள இந்த ஆசாமியைத் தமிழகத்தில் சீண்டக் கூட யாருமில்லை. எங்கே தங்கள் வீட்டுப் பெண்களிடமும் இந்தக் கிழட்டு காம கே(ா)டி கைவைத்து விடுவானோ என்ற பீதியில், பார்ப்பனர்களே கூட காஞ்சி சங்கரமடத்துக்குச் செல்லத் தயங்குகிறார்கள். இப்பேர்பட்ட யோக்கிய சிகாமணிக்கு, ஒரு மாநிலத்தின் முதலமைச்சரே, அரசு விருந்தினர் என்ற சிறப்புத் தகுதியளிக்க உத்தரவிட்டு, அதனைச் செயல்படுத்தி இருக்கின்றார்.

இந்துவெறி பாசிஸ்டுகள் ஆளும் குஜராத்தின் முதல்வரோ அல்லது இராஜஸ்தான், ம.பி. மாநில முதல்வர்களோ இதனைச் செய்யவில்லை. இந்துவெறிக்கு எதிராகச் சவடால் அடித்துவரும் 'இடதுசாரி' ஜனநாயகக் கூட்டணி ஆளும் கேரளத்தின் முதல்வர் அச்சுதானந்தன்தான் இப்படி உத்தரவிட்டுச் செயல்படுத்தியுள்ளார். நான்கு நாட்கள் பயணமாக, சிறீ உத்திராடம் திருநாள் மகாராஜாவுக்கு ஆசி வழங்க திருவனந்தபுரம் சென்ற இந்த 'மட' சங்கராச்சாரிக்கு, கேரள அரசின் 15 துறைகளும் அரசு விருந்தினர் என்ற தகுதியளித்துச் சிறப்பிக்க வேண்டும் என்று அவர் டிசம்பர் 12-ஆம் நாளன்றே உத்தரவிட்டு பக்தியோடு செயல்படுத்தியுள்ளார்.

மார்க்சியத்தின் பெயரால் கட்சி நடத்திக் கொண்டு ஆட்சி செய்யும் சி.பி.எம்.-இன் முதலமைச்சரான அச்சுதானந்தன், ஒரு மடாதிபதிக்கு மரியாதை செய்வதே மார்க்சியத்துக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகும். அதிலும் கொலை செய்யத் தூண்டுதல், கூட்டுச்சதி, பொய்சாட்சிகளை உருவாக்குதல், கொலை செய்தல் ஆகிய சட்டப் பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு, குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒரு கிரிமினல் மடாதிபதிக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு தந்திருக்கிறார் 'மார்க்சிஸ்டு' முதல்வர். கூச்ச நாச்சமின்றி, ஒரு இந்துவெறி பயங்கரவாதிக்கு 'இடதுசாரி' அரசே மரியாதை செலுத்திச் சிறப்பிக்கும் கீழ்த்தரமான செயலைக் கண்டிக்கக்கூட முன்வராமல், பதவி நாற்காலியில் ஒட்டிக் கொண்டிருக்கிறது, 'இடதுசாரி' கூட்டணியிலுள்ள இன்னுமொரு போலி கம்யூனிஸ்ட் கட்சியான வலது கம்யூனிஸ்ட் கட்சி.

ஆனால், முஸ்லிம் லீகின் மாநிலச் செயலாளரான குஞ்ஞாலிக் குட்டி, 'இடதுசாரி' அரசின் இச்செயலை கடுமையாக விமர்சித்துள்ளார். ''தமிழ்நாட்டில் கொலைக் குற்றவாளி என்று குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள ஜெயேந்திரருக்கு அரசு மரியாதை அளிப்பது முறையல்ல; சங்கப் பரிவாரங்களின் விருப்பங்களுக்கேற்ப அரசின் கொள்கையை மாற்றக் கூடாது'' என்று எதிர்ப்பு தெரிவித்துள்ளார். கேரள தலித் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் இராமபத்ரன், ''இது இந்துத்துவ ஓட்டு வங்கியை அறுவடை செய்ய முயற்சிக்கும் கீழ்த்தரமான செயல்'' என்றும், ''மத அடிப்படையில் மக்களைப் பிளக்கும் செயல்'' என்றும் 'இடதுசாரி' அரசைச் சாடியுள்ளார். கொல்லத்தைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளரான டாக்டர் எம்.எஸ். ஜெயபிரகாஷ், ''அனைத்து சட்டங்களுக்கும் மேலானவன் பிராமணன் என்று மனுதர்ம விதியை உயர்த்திப் பிடித்து, கொலைக் குற்றவாளியானாலும் பார்ப்பான் என்பதால் கேரள அரசு காஞ்சி மட சங்கராச்சாரிக்கு மரியாதை செலுத்துகிறது'' என்று கடுமையாகச் சாடியுள்ளார்.

அக்ரஹார அம்பிகளின் கூடாரமான சென்னைத் தொலைக்காட்சியில், ஆண்டுதோறும் தீபாவளியன்று அதிகாலையில் ''கங்கா ஸ்நானம் ஆச்சோ!'' என்று தனது ஊத்தை வாயை இளித்து ஆசி வழங்கி வந்த இந்த ஒடுகாலி சங்கராச்சாரியை, சங்கரராமன் படுகொலைக்குப் பிறகு அத்தொலைக்காட்சி கூட அழைப்பதை நிறுத்திவிட்டது. தமிழக பார்ப்பன பத்திரிகைகளும் இந்தக் காமகே(ா)டியின் அருளாசியை படத்துடன் வெளியிடுவதை நிறுத்தி விட்டன. அவாள்களே புறக்கணித்துவிட்ட இப்பார்ப்பன பயங்கரவாதியிடம் அப்படி என்ன முற்போக்கைக் கண்டார்களோ இந்த போலி கம்யூனிஸ்டுகள்; அரசு மரியாதை அளித்து சிறப்பித்து ஆராதனை செய்திருக்கிறார்கள்!

இவர்கள் இவ்வாறு பார்ப்பனியத்துடன் கூடிக் குலாவுவதும் பார்ப்பனியத்துக்கு விசுவாசமாகச் சேவை செய்வதும் புதிய விவகாரமல்ல. வேத மந்திரங்களிலும் வேள்விச் சடங்குகளிலும் புராதனப் பொதுவுடைமைக் கூறுகள் உள்ளன என்று ஆய்வு செய்து, இந்த அபத்தத்தை ''பண்டைக்கால இந்தியா'' என்ற தனது நூல் மூலம் பறைசாற்றினார் போலி கம்யூனிஸ்டுகளின் அந்நாளையத் தலைவர் எஸ்.ஏ. டாங்கே.

நரகலில் நல்லரிசி பொறுக்கிய கதையாக, கம்பராமாயணத்தில் சோசலிசக் கூறுகளைக் கண்டுபிடித்த ப.ஜீவானந்தம், தமிழக கம்யூனிசத் தலைமையையே கம்பன் கழகமாக மாற்றினார். அவரின் சீடரான பெரியவர் நல்லக்கண்ணு கூட இன்னும் தனக்குப் பிடித்த இலக்கியம் என்று கம்பராமாயணத்தைத்தான் குறிப்பிடுகிறார்.

''வேதங்கள், உபநிடதங்கள் முதலான பாரதீய கலாச்சார பொக்கிஷங்க



படிப்பகம்

www.padippakam.com

ளும் மார்க்சிய - லெனினிய புரட்சிகர தத்துவமும் இணைந்தது தான் நான் உயர்த்திப் பிடிக்கின்ற இந்திய மார்க்சியம்'' என்று அறிவித்து, இந்தியாவை ''வேதங்களின் நாடு'' என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொண்டார், 'மார்க்சிஸ்டு'களின் ஞானகுருவாகிய ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு.

அவரது விசுவாச சீடரும், மறைந்த முன்னாள் கேரள 'மார்க்சிஸ்டு' முதல்வருமான ஈ.கே.நாயனார், கிறித்தவர்களின் 'லோக குரு'வான போப் இரண்டாம் ஜான்பால், இந்தியாவுக்கு வருகை தந்தபோது அவருக்கு பக்தியோடு பகவத்கீதை நூலைப் பரிசளித்தார்.

அடக்கருமமே! இராம.கோபாலன் செய்கிற வேலையையா இந்தச் செஞ்சட்டை தோழர் செய்தார் என்று நீங்கள் முகத்தைச் சுளிக்கும்போதே, தனது வீட்டைக் கட்டுகையில் செங்கல் பூசை நடத்திய ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடின் புரட்சிகர போர்த்தந்திரத்தையும், தனது துணைவியார் கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்த மறுப்பேதும் சொல்லாத அவரது ஜனநாயக மாண்பையும், தனது பேரனுக்குப் பூணூல் கல்யாணம் நடத்திய நாடாளுமன்ற 'மார்க்சிஸ்டு' அவைத் தலைவர் சோமநாத் சட்டர்ஜியின் முற்போக்கு சிந்தனையையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

**போலி கம்யூனிஸ்டுகள், இனி வெட்கப்படாமல் பூணூலை மாட்டிக் கொண்டு காஞ்சி சங்கர மடத்தில் சங்கமிக்கலாம்; அடுத்து வரும் தேர்தல்களில் ''காஞ்சிப் பெரியவாளின் ஆசி பெற்ற சின்னம் - அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்!'' என்று விளம்பரம் செய்யலாம். யார் கண்டது!**

குன்றக்குடி அடிகளாரை ''முற்போக்கானவர்'', ''ஆன்மீக கம்யூனிஸ்ட்'' என்றெல்லாம் பிதற்றித் திரிந்தவர்கள் முந்நாளைய போலி கம்யூனிசத் தலைமையினர் என்றால், ''நான் முதலில் பார்ப்பான்; அப்புறம் இந்து; அதன்பிறகுதான் கம்யூனிஸ்ட்'' என்று மே.வங்க 'மார்க்சிஸ்டு' அமைச்சரான சுபாஷ் சக்ரவர்த்தி வெளிப்படையாக அறிவிப்பதும், அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் கைகட்டி நிற்பதும் இந்நாளைய போலி கம்யூனிசத் தலைமையின் மகிமைகள்!

தமது அதிகாரபூர்வ நாளேடான தீக்கதிரில் நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை தீபம் முதலானவற்றுக்குச் சிறப்பு மலர் வெளியிடுவதோடு, தொழிற்சங்க அணிகளோடு சேர்ந்து ஆயுத பூசை விழா கொண்டாடி மகிழும் இப்போலி கம்யூனிஸ்டுகள், இனி வெட்கப்படாமல் பூணூலை மாட்டிக் கொண்டு காஞ்சி சங்கர மடத்தில் சங்கமிக்கலாம்; அடுத்து வரும் தேர்தல்களில் ''காஞ்சிப் பெரியவாளின் ஆசி பெற்ற சின்னம் - அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்!'' என்று விளம்பரம் செய்யலாம்; கலை இரவுகள், தொழிற்சங்கக் கூட்டங்களுக்கு ஆசீர்வாதம் வழங்க 'காம'ரேடு காமகே(ா)டியையே அழைக்கலாம்; போலி கம்யூனிஸ்டுகள் எதையும் செய்வார்கள்; யார் கண்டது!

இத்தனைக்கும் பிறகும், இந்துமத வெறி பாசிசத்தை சி.பி.எம். தலைமையில் அணிதிரண்டு வீழ்த்திவிட முடியும் என்று 'மார்க்சிஸ்டு' கட்சியினர் யாராவது சொன்னால், சிந்திக்கத் தெரிந்த எவரும் வாயால் சிரிக்க மாட்டார்கள்!

**• இரணியன்**

## முல்லைப் பெரியாறு: ''இன்னுமொரு துரோகத்தை அனுமதியோம்!'' — கண்டன ஆர்ப்பாட்டம்

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழகத்தின் நியாய உரிமைகளை மறுத்து அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வரும் கேரள மாநில அரசைக் கண்டித்தும், உச்சநீதி மன்ற தீர்ப்பைச் செயல்படுத்தக் கோரியும் சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து 14.12.06 அன்று எழுச்சி மிகு கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

திருப்புவனம் வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் குணசேகரன் தலைமையில் திருப்புவனம் சந்தைத் திடலில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், கேரளத்தில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் ஓட்டுக் கட்சிகளின் தகிடுதத்தங்களைத் தோலுரித்தும்; குறிப்பாக 'மார்க்சிஸ்டு' முதல்வர் அச்சுதானந்தன், நீர்ப்பாசன அமைச்சர் பிரேமச்சந்திரன் முதலானோரின் அடாவடித்தனங்களைக் கண்டித்தும், பேச்சு வார்த்தை - தேசிய ஒருமைப்பாடு என்று பசப்பி வரும் பார்ப்பன-பனியா ஆளும் கும்பலை எதிர்த்தும், உச்சநீதி மன்றத் தீர்ப்பை அமல்படுத்த 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மத்திய கமிட்டியை வலியுறுத்தாமல் அச்சுதானந்தனுக்கு வால் பிடித்துச் செல்லும் தமிழக சி.பி.எம். கட்சியின் துரோகத்தை அம்பலப்படுத்தியும், தமிழக ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனத்தை வெளிச்சப்படுத்தியும், பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசிய சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் முன்னணித் தோழர்கள் உரையாற்றினர். திரளான உழைக்கும் மக்களின் பங்கேற்புடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைத்து ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தை அம்பலப்படுத்திப் போராட அறைகூவுவதாக அமைந்தது.




*- பு.ஜ. செய்தியாளர், சிவகங்கை.*


படிப்பகம்

www.padippakam.com

# டாட்டா-பிர்லா கூட்டாளி! பாட்டாளிக்குப் பகையாளி!!

## மறுகாலனியாதிக்கத்தில் போலி கம்யூனிஸ்டுகளின் புதிய அவதாரம்!

மார்க்சியம் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம்; ''டாடா மார்க்சியம்'' பற்றி உங்களுக்குத் தெரியுமா?

அதென்ன டாடா மார்க்சியம்? மார்க்சியத்துக்கு ''டாடா'' காட்டி விட்டு, செங்கொடி பிடித்துக் கொண்டே தரகுப் பெருமுதலாளி டாடாவுக்கு விசுவாசமாகச் சேவை செய்வதற்குப் பெயர்தான் ''டாடா மார்க்சியம்''. இதைப் பற்றி நீங்கள் விளக்கமாக அறிய வேண்டுமானால், 'டாடா மார்க்சிஸ்டுகள்' ஆளும் மே.வங்கத்தின் ஹூக்ளி மாவட்டத்திலுள்ள சிங்கூர் கிராமத்தில் நடக்கும் போராட்டத்தைப் பார்த்தாலே போதும்.

''டாடா-பிர்லா கூட்டாளி; பாட்டாளிக்குப் பகையாளி'' என்று முன்னொருக் காலத்தில் முழங்கிவந்த 'மார்க்சிஸ்டுகள்', இப்போது மே.வங்க மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரில் உள்நாட்டு - வெளிநாட்டு நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கு சிவப்புக் கம்பளம் விரித்து மறுகாலனியாக்கச் சேவையில் புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதன்படி, சிங்கூர் கிராமத்தில் இரு போகம் சாகுபடியாகும் 997.1 ஏக்கர் நிலத்தை மே.வங்க 'இடதுசாரி' அரசே ஆக்கிரமித்து, தரகுப் பெருமுதலாளித்துவ டாடா நிறுவனத்துக்குத் தாரை வார்த்துள்ளது. இங்கு கார் தொழிற்சாலையை நிறுவி நடுத்தர மக்களும் எளிதில் வாங்கும் வகையில் ஒரு லட்ச ரூபாய்க்கு கார் உற்பத்தி செய்யப் போவதாக டாடா நிறுவனம் கூறுகிறது. இதை எதிர்த்து, ''விளைநிலங்களை ஆக்கிரமிக்காதே! வாழ்வுரிமையைப் பறிக்காதே!'' என்று சிங்கூர் மக்களும் பல்வேறு இடதுசாரி-ஜனநாயக இயக்கங்களும் கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ந்து போராடி வருகின்றன.

போராடும் சிங்கூர் விவசாயிகளையும் பிற இயக்கத்தினரையும் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை சீர்குலைக்கும் அராஜகவாதிகள் என்றெல்லாம் முத்திரை குத்திச் சாடும் 'மார்க்சிஸ்டு' ஆட்சியாளர்கள், சிங்கூர் விவசாயிகள் சுய விருப்பத்துடன் நிலங்களை அரசிடம் கையளித்து, உரிய நிவாரணத்தையும் பெற்று விட்டார்கள் என்றும், அரசியல் ஆதாயத்துக்காக எதிர்த்தரப்பினர் வெளியிலிருந்து ஆட்களைத் திரட்டி வந்து போராட்டம் என்ற பெயரில் அராஜகம் செய்வதாகவும் கூறுகிறது. கடந்த நவம்பர் 30-ஆம் தேதியன்று டாடா ஆலை அமையவுள்ள நிலத்தில் முள்கம்பி வேலி போட்டும், போராடிய மக்கள் மீது கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் தடியடி தாக்குதல் நடத்தியும், 144 தடையுத்தரவு பிறப்பித்தும், சிங்கூரில் டாடா ஆலையை நிறுவியே தீருவோம் என்றும் 'இடதுசாரி' அரசு கொக்கரிக்கிறது.

போராட்டங்கள் வலுக்கத் தொடங்கியதும், பிழைப்புவாத திரிணாமுல் காங்கிரசு தலைவியான மம்தா பானர்ஜி, தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள, தாமும் டாடா ஆலைத் திட்டத்தை எதிர்ப்பதாக மறியல் - கடையடைப்புப் போராட்டங்களை நடத்தினார். சிங்கூரில் அவர் நுழையத் தடை விதிக்கப்பட்டதும், தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறார். அவரது போராட்டத்துக்கு நர்மதா பாதுகாப்பு இயக்கத்தின் மேதா பட்கர் முதல் பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய் வரை பல்வேறு தரப்பினரும் ஆதரவு தருவதைக் கண்டு பீதியடைந்துள்ள டாடா மார்க்சிஸ்டுகள், தமது துரோகத்தனத்திற்கு நியாயவாதங்களை அடுக்கி மேலும் அம்பலப்பட்டு வருகின்றனர்.

''சிங்கூரில் இதுவரை 9020 பேருக்கு நிவாரணத் தொகை வழங்கி விட்டோம்; இன்னும் ஏறத்தாழ 3000 பேர் மட்டுமே உள்ளனர். டிசம்பர் மாத இறுதிக்குள் அவர்களுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு விடும். சிங்கூரில் ஒரு ஏக்கர் நிலத்தின் உத்தேச மதிப்பு ரூ. 6.02 லட்ச ரூபாயாக உள்ள போதிலும், ஒரு ஏக்கருக்கு ரூ. 8.6 லட்சம் கொடுத்து நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளோம். இதற்காக அரசு ரூ. 76.64 கோடி ரூபாயை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது'' என்று புள்ளி விவரங்களை அடுக்குகின்றனர் மே.வங்க ஆட்சியாளர்கள்.

கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு கூடுதலாக தொகை கொடுத்துள்ளதாக போலி கம்யூனிஸ்டுகள் வாதிடுவதே மோசடித்தனமானது. நிவாரணத் தொகை என்பது பத்திரப் பதிவுப்படி, நடப்பிலுள்ள மூன்றாண்டுகளில் அந்த நிலத்தின் சராசரி மதிப்பேயாகும். பத்திரப் பதிவு செலவுகளைக் குறைக்க, நிலத்தின் மதிப்பை ஏறத்தாழ 50-60 சதவீதத்துக்குக் குறைத்துக் காட்டி பதிவு செய்வதென்பது நாடெங்கும் எழுதப்படாத விதியாகவே உள்ளது. இந்நிலையில் நிலத்தின் சராசரி மதிப்பைக் கணக்கிட்டு அதனுடன் கொஞ்சம் கருணைத் தொகையை இடதுசாரி ஆட்சியாளர்கள் சேர்த்துக் கொடுத்தாலும், நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு நிலத்தின் உண்மை மதிப்பின்படி நிவாரணத் தொகை கிடைக்காது.

ஏற்கெனவே கொல்கத்தாவின் புறவழிச்சாலை மற்றும் ராஜர்ஹட் நகரியத்துக்காக நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு சராசரியாக ரூ.3 லட்சம் தரப்பட்டது. ஆனால் அந்த இடத்தின் சந்தை விலையோ ரூ.10 லட்சத்துக்கும் மேலாகும். எனவே, சிங்கூரில் நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு முழுமையாக நிவாரணம் அளித்துவிட்டதாக போலி கம்யூனிஸ்டுகள் பசப்புவது கடைந்தெடுத்த மோசடித்தனமே யாகும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் மறுவாழ்வுக்கான உத்தரவாதம் ஏதுமின்றி, நிவாரணத் தொகை தருவதையே மறுவாழ்வு என்று ஏய்ப்பது போலி கம்யூனிஸ்டுகள் செய்யும் இன்னுமொரு மோசடி. 1947-இலிருந்து 2000 வரை 'வளர்ச்சி'த் திட்டங்களுக்காக மே.வங்கத்தில் 47 லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் அரசால் பறிக்கப்பட்டு, 70 லட்சம் மக்கள் மறுவாழ்வுக்கான ஏற்பாடுகள் செய்து தரப்படாமல் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களில் 9% பேருக்கு


மட்டுமே மறுவாழ்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக அரசின் புள்ளி விவரங்களே காட்டுகின்றன.

'இடதுசாரி' ஆட்சி நடக்கும் மே.வங்கத்தைவிட ஒப்பீட்டு ரீதியில் மேலானதாக இதர மாநில அரசுகள் மறுவாழ்வு-நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளன. ஆந்திராவில் 28 சதவீத அளவுக்கும், ஒரிசாவில் 34 சதவீத அளவுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளதாக மைய அரசின் புள்ளியியல் துறையின் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. இதுவும்கூட, உலக வங்கியின் நிர்பந்தம், மேற்கத்திய நாடுகளது மனித உரிமை அமைப்புகளின் கண்டனம் முதலானவற்றுக்குப் பிறகு கண்துடைப்பாகவே செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் அதைக்கூட செய்யாமல் ஒப்பீட்டு ரீதியில் 'இடதுசாரி' அரசு பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

மே.வங்கத்தில் பல லட்சகணக்கான மக்கள் 'வளர்ச்சி'த் திட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், ஒருங்கிணைந்த மறுவாழ்வுக் கொள்கை எதையும் இதுவரை 'இடதுசாரி' அரசு வகுக்கவோ செயல்படுத்தவோ இல்லை. சிங்கூரில் போராட்டம் தொடர்வதாலேயே, இப்போது மறுவாழ்வுக்கான நிவாரணமளிப்பதாக 'இடதுசாரி' அரசு கூறுகிறது. ஆனால், ஏற்கெனவே இதேபோல பல்வேறு தனியார்-அந்நிய ஏகபோக நிறுவனங்களின், முதலீட்டுத் திட்டங்களால் வெளியேற்றப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காக எந்தக் கொள்கையோ, திட்டமோ இதுவரை இல்லை.

மே.வங்கத்தில் குத்தகை விவசாயிகள்தான் பெருமளவில் விவசாயம் செய்கின்றனர். சிங்கூரிலும் குத்தகை விவசாயிகள் கணிசமாக உள்ளனர். நிலவுடைமையாளர்களுக்கு அளிக்கப்படும் நிவாரணத் தொகையில் 25% தொகை, பதிவு பெற்ற குத்தகை விவசாயிகளுக்குத் தரப்படும் என்கிறது 'இடதுசாரி' அரசு. ஆனால், பெரும்பாலோர் வாய்வழி ஒப்பந்தம் மூலம் குத்தகை விவசாயம் செய்யும் பதிவு செய்யப்படாத குத்தகை விவசாயிகளாக உள்ளதால், இவர்களுக்கு நிவாரணமோ மறுவாழ்வோ கிடைக்காது.

இதே நிலைமைதான் சிங்கூரிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூலி விவசாயிகளுக்கும் நேரும். ஏனெனில், கையகப்படுத்தப்படும் நிலத்தின் உடைமையாளர்களுக்குத்தான் அரசு நிவாரணம் தருமேயொழிய, மற்றவர்களுக்கு எதுவும் கிடைக்காது. இக்கிராமத்தைச் சார்ந்து வாழும் நாவிதர்கள், துப்புரவுத் தொழிலாளிகள், சிறுவியாபாரிகள் முதலானோர் எவ்வித நிவாரணமோ, மறுவாழ்வோயின்றி கட்டாயமாக வெளியேற்றப்பட்டு, நகரங்களில் கூலி வேலை தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.



நேற்று வரை விவசாயிகள்; இன்று...?
— கிராம நுழைவாயிலில் தடுப்பரண் எழுப்பிப் போராடிய சிங்கூர் விவசாயிகள்.

இவை ஒருபுறமிருக்கட்டும். நிலம் தேவையெனில் டாடா நிறுவனமே சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள விவசாயிகளிடம் பேசி வாங்கிக் கொள்ளலாமே! ஏன், அரசு அதைக் கையகப்படுத்தி டாடாவுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் மையமான கேள்வி. 1894-ஆம் ஆண்டின் நிலக் கையகப்படுத்தல் சட்டப்படி, பொதுநலனுக்காக - பொதுப் பயன்பாட்டுக்காக மட்டுமே நிலத்தைக் கையகப்படுத்தலாம். அதாவது, அரசின் சார்பில் பள்ளி, கல்லூரி, மருத்துவமனை, பேருந்து-ரயில் நிலையம், குடியிருப்புகளை நிறுவ இச்சட்டத்தின்படி விவசாய நிலங்களை அரசு கையகப்படுத்தலாம். ஆனால், ஒரு தனியார் தரகுப் பெருமுதலாளியின் ஆதாயத்துக்காக விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவதென்பது சட்டவிரோதமானது. சட்டத்தைப் பார்த்தால் மாநிலத்தைத் தொழில்மயமாக்க முடியாது என்று நியாயவாதம் பேசும் 'மார்க்சிஸ்டுகள்', டாடாவுக்காக சட்டத்தையே வளைத்து முறுக்குகிறார்கள்.

ஏற்கெனவே பல தனியார் ஆலைகளுக்கு மே.வங்க அரசு நீண்ட கால குத்தகைக்குத்தான் நிலங்களைக் கொடுத்து வந்துள்ளது. இப்போது டாடாவுக்கு குத்தகை அடிப்படையில் நிலத்தைத் தராமல், மொத்தமாகக் கையகப்படுத்தி தாரைவார்க்கக் காரணம் என்ன என்பதைப் பற்றி மே.வங்க இடதுசாரி அரசு இன்றுவரை வாய் திறக்க மறுக்கிறது. மேலும், மே.வங்க அரசிடம் குத்தகை அடிப்படையில் நிலத்தைப் பெற்று தொழில் தொடங்கிய பல தனியார் நிறுவனங்கள் நசிவடைந்து மூடப்பட்டு, அந்நிலங்கள் மீண்டும் அரசின் பொறுப்பில் உள்ள நிலையில், அவற்றை டாடாவுக்குக் கொடுப்பதை விடுத்து புதிதாக சிங்கூரில் நிலங்களைக் கையகப்படுத்துவதற்குக் காரணம் என்ன என்பதையும் தெரிவிக்க மறுக்கிறது.

கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் கார் தொழிற்சாலையை மட்டும் டாடா நிறுவப் போவதில்லை. உபரியாக உள்ள நிலத்தில் உற்பத்தி அல்லாத பிற நடவடிக்கைகளுக்கு - அதாவது அடுக்குமாடி குடியிருப்புகள், அங்காடிகளை நிறுவவும் திட்டமிட்டுள்ளது. இப்படித்தான் சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் நிறுவப்படுகின்றன. ஆனால், சிங்கூரில் டாடா நிறுவுவது கார் தொழிற்சாலைதான்; அது சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்ல என்கிறது 'இடதுசாரி' அரசு. அத்தகைய மண்டலம் அல்ல என்றால், உபரியாக ஏராளமான நிலத்தை டாடாவுக்குத் தாரை வார்ப்பது ஏன் என்பதற்குப் போலி கம்யூனிஸ்டுகள் விளக்கம் தர மறுக்கிறார்கள்.

ஒரு தனியார் நிறுவனத்துக்காக விளைநிலங்களை அரசு கையகப்படுத்த தனிச்சட்டமும் விதிமுறைகளும் உள்ளன. இச்சட்டப்படி, அத்தனியார் நிறுவனம், மாவட்ட ஆட்சியரிடம் நிலத்திற்கான தொகையையும் மறுவாழ்வு - நிவாரணத் தொகையையும் முன்பணமாகச் செலுத்தி ஒப்பந்தம்

www.padippakam.com

போட வேண்டும். ஆனால் டாடா நிறுவனம் மே.வங்கத்தின் ஹூக்ளி மாவட்ட ஆட்சியரிடம் அப்படியொரு ஒப்பந்தம் போடவில்லை; மறுவாழ்வு - நிவாரணத் தொகையையும் முன்பணமாகச் செலுத்தவில்லை.

இருப்பினும், டாடா நிறுவனம் ஆண்டுக்கு 0.01 சதவீத வட்டியோடு ரூ. 20 கோடியை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிவாரணத் தொகையாகத் தர முடிவு செய்யப்பட்டுள்ளதாக 'இடதுசாரி' ஆட்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு உள்ள ரூபாயின் மதிப்போடு ஒப்பிட்டால், இன்று அதன் மதிப்பு ரூ. 11-12 கோடிகள்தான். இதன்படி பார்த்தால், இன்றைய ரூபாயின் மதிப்புப்படி ஏறத்தாழ ரூ.12 கோடி கொடுத்துவிட்டு, ரூ.100 கோடி மதிப்புள்ள நிலத்தை டாடா நிறுவனம் சுருட்டிக் கொண்டுவிட்டது. இந்தப் பகற்கொள்ளைக்கான சிவப்புத் தரகர்களாக போலி கம்யூனிஸ்டுகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.





''எங்களுக்குக் கார் வேண்டாம்; அரிசி வேண்டும்''
— 'டாடா மார்க்சிஸ்டு'களுக்கு எதிராக
சிங்கூர் விவசாயிகளின் போராட்டம்.

1988-ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டத்தின் 13-வது விதியின்படி, அரசாங்க அதிகாரத்தைக் கொண்டு விதிமுறைகளை மீறி ஒரு தனிநபருக்கோ, நிறுவனத்துக்கோ சலுகை காட்டுவது சட்டப்படி குற்றமாகும். இதன்படி பார்த்தால், டாடாவுக்கு விதிமுறைகளை மீறி விளைநிலங்களைத் தாரை வார்த்துள்ள மே.வங்க 'இடதுசாரி' அரசாங்கமே ஊழல்- முறைகேடுகளில் ஈடுபட்டுள்ள குற்றவாளியாகும்.

இவையெல்லாம் மாநிலத்தைத் தொழில்மயமாக்குவதைத் தடுக்கும் அபத்தமான வாதங்கள் என்று தமது துரோகத்தனத்தை நியாயப்படுத்தும் டாடா மார்க்சிஸ்டுகள், இதர மாநில அரசுகளையெல்லாம் விஞ்சும் வகையில் மறுகாலனியக் கொள்கைகளை போட்டி போட்டுக் கொண்டு செயல்படுத்தி வருகின்றனர். அதற்கு சிங்கூர் விவகாரமே எடுப்பான சாட்சியமாக உள்ளது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் இந்தியாவில் நிறுவப்பட்டாலும், அவை அன்னிய பிரதேசங்கள் - தனி சமஸ்தானங்கள் என்றும், இந்தியக் குடிமகனாக இருந்தாலும் இந்த சமஸ்தானத்துக்குள் நுழைய அனுமதி - அதாவது ''விசா'' வாங்க வேண்டும் என்கிறது மைய அரசு. சிறப்புப் பொருளாதார மண்டலங்களை எதிர்ப்பதாகக் கூறும் டாடா மார்க்சிஸ்டுகள், இதே விதியைத்தான் சிங்கூரிலும் செயல்படுத்துகின்றனர். சிங்கூரில் நிறுவப்படும் டாடா ஆலைக்கெதிராக விவசாயிகளும் பிற இயக்கத்தினரும் போராடத் தொடங்கியதும், டாடா சமஸ்தானத்திற்குள் நுழையக்கூடாதென 144-வது பிரிவின்படி தடையுத்தரவு, ஊரடங்கு உத்தரவு போட்டு, மீறுவோரைக் கைது செய்துள்ளனர். மேதாபட்கர், அருந்ததி ராய் உள்ளிட்டு எவருமே டாடா சமஸ்தானத்துக்குள் நுழைய அனுமதி கிடையாது என்று கெடுபிடி செய்து விரட்டியுள்ளனர். மறுகாலனியாக்கத்தின் கீழ் போலி கம்யூனிஸ்டுகள் எவ்வாறு ஆளும் வர்க்கத் தரகர்களாக மாறி துரோகமிழைப்பார்கள் என்பதை இவையனைத்தும் தெளிவாகவே நிரூபித்துக் காட்டிவிட்டன.

சிங்கூரில் தொடரும் போராட்டம், வெறுமனே நிவாரணம் - மறுவாழ்வுக்கான போராட்டமல்ல; சாராம்சத்தில், இது நாட்டை மீண்டும் காலனியாக்கிவரும் ஆட்சியாளர்களுக்கும், தனியார் - அன்னிய ஏகபோக முதலாளிகளின் சூறையாடலுக்கும், போலி கம்யூனிசதுரோகிகளான டாடா மார்க்சிஸ்டுகளுக்கும் எதிரான போராட்டம்!

''போஸ்கோ'' ஒப்பந்தத்தால் தமது மண்ணிலிருந்து பிய்த்தெறியப்பட்ட ஒரிசா பழங்குடியின மக்களின் போராட்டம், சிறப்புப் பொருளாதார மண்டலங்களால் வாழ்விழக்கும் விவசாயிகளின் போராட்டம், நகரை அழகுபடுத்தும் திட்டங்களால் வீடு - வாசல் இழந்து நிற்கும் நகர்ப்புற சேரி மக்களின் போராட்டம், தமது பிழைப்புக்கான இடத்திலிருந்து விரட்டப்படும் சிறுகடை-தரைக்கடை வியாபாரிகளின் போராட்டம், தனியார்மய-தாராளமயத் தாக்குதல்களால் மூண்டெழும் விவசாயிகள்-தொழிலாளர்களின் போராட்டம் — என நாடெங்கும் மறுகாலனியாக்கத்திற்கு எதிராகப் பரவிவரும் போராட்டத்தின் ஒரு அங்கம்தான், சிங்கூரில் தொடரும் போராட்டம். சொல்லிலே சோசலிசம் பேசிக் கொண்டு செயலிலே உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளுக்குச் சேவை செய்யும் சமூக பாசிஸ்டுகளாகச் சீரழிந்துவிட்ட போலி கம்யூனிஸ்டுகளை அம்பலப்படுத்தி முறியடிக்காமல், மறுகாலனியத் தாக்குதலுக்கெதிரான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதே சிங்கூர் உணர்த்தும் பாடம்.

• பாலன்


படிப்பகம்

www.padippakam.com

# பருத்தி விவசாயிகள் – பரிசோதனைச் சாலை எலிகளா?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள அரூர் வட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மற்றும் மொரப்பூர், நல்லம்பள்ளி ஒன்றியங்களைச் சேர்ந்த பருத்தி விவசாயிகளின் எதிர்கால வாழ்வே இன்று இருண்டு போய்க் கிடக்கிறது. இப்பகுதியில் ஏறத்தாழ 4,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட பருத்திச் செடிகள் பூவும் பூக்காமல், காயும் காய்க்காமல் மலடாகி நிற்பதால், ஏறத்தாழ 20 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு நட்டமேற்பட்டுள்ளது.

நட்டமடைந்துள்ள பருத்தி விவசாயிகள், தங்களிடம் பருத்தி விதையை விற்பனை செய்த ''மாஹிகோ'' நிறுவனம்தான், இந்த நட்டத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்கிறார்கள். இவர்களுக்கு விற்கப்பட்ட பருத்தி விதையின் உறையில், இவ்விதைகள் ஆராய்ச்சிக்கானது என அச்சடிக்கப்பட்டுள்ளது. மாஹிகோ நிறுவனமோ இந்த உண்மையை விவசாயிகளிடம் சொல்லாமலேயே விதைகளை விற்றுள்ளது.

மேலும், ஒரு விதையைப் பரிசோதனை அடிப்படையில் பயிர் செய்யும் பொழுது, அதன் விளைச்சலுக்குத் தேவையான அத்துணை செலவையும் விதை விற்பனை நிறுவனம்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாஹிகோ நிறுவனமோ, ''புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட விதை; இது அதிக மகசூல் தரும்'' என்ற பொய்யைச் சொல்லி, பி.டி. 6918 இரக பருத்தி விதைகளை விற்பனை செய்ததால், பயிர்ச் செலவு முழுவதும் விவசாயிகளின் தலையில் விழுந்துவிட்டது.

வறட்சி பாதித்த தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சிறு-நடுத்தர விவசாயிகள் கைக்காசைப் போட்டு விவசாயம் செய்யும் அளவிற்கு வசதியானவர்கள் கிடையாது. கடன் வாங்கித்தான் விவசாயம் செய்ய வேண்டியிருப்பதால், உற்பத்திச் செலவும் இரண்டு மடங்காக எகிறி விடுகிறது. 250 ரூபாய் பெறுமான பூச்சி மருந்தை கடனுக்கு வாங்கும் பொழுது, ரூ. 530 என்றும்; டி.ஏ.பி. உர மூட்டையைக் கடனுக்கு எடுக்கும் பொழுது, ஒவ்வொரு மூட்டைக்கும் 50 ரூபாய் ஏற்றி வைத்தும், விவசாயிகளின் இரத்தத்தை பூச்சி மருந்து கடை முதலாளிகள் உறிஞ்சி விடுகின்றனர். பருத்தி மகசூல் பல்லைக் காட்டி விட்டதால், கடனை எப்படி அடைக்கப் போகிறோம் என்ற மன உளைச்சலில் இப்பகுதி விவசாயிகள் சிக்கிக் கொண்டிருப்பதோடு, இப்பகுதியில் தற்கொலைச் சாவுகள் நடக்கத் தொடங்கி விடுமோ என்ற பீதியும் பரவி வருகிறது.

விவசாயிகளிடம் விற்கப்படும் விதைகள் தரம் வாய்ந்தவைதானா எனச் சான்றிதழ் அளிக்க வேண்டிய பொறுப்பு வேளாண் துறைக்குத்தான் உண்டு. ஆனால், அவர்களோ தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் கதையாக, விவசாயிகள் ஏமாற்றப்பட்ட பிறகு, மாஹிகோவிடம் நஷ்ட ஈடு பெற்றுத் தரவேண்டும் என விவசாயிகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்திய பிறகுதான், பருத்தி வயல்களுக்குள் காலடி எடுத்து வைத்தனர். ஆனாலும், அதிகாரவர்க்கம் 4,000 ஏக்கர் பரப்பளவில், மாஹிகோ கொடுத்த விதைகள் மலட்டுச் செடியாக வளர்ந்து நிற்பதை, கண்ணுக்குத் தெரியும் ஆதாரத்தை நம்ப மாட்டார்களாம். அந்த விதைகளைச் சோதனைச் சாலையில் பரிசோதித்த பிறகே எந்த முடிவுக்கும் வருவார்களாம். எப்பேர்ப்பட்ட நடுநிலை!

ஆந்திராவையும் மகாராஷ்டிராவையும் சேர்ந்த பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதற்கு மாஹிகோ விற்ற பி.டி. பருத்தி இரக விதைகள்தான் காரணம் என்பதும்; இந்த மாஹிகோ நிறுவனம், அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான மாண்சாண்டோவின் இந்திய ஏஜெண்டாகச் செயல்பட்டு வருவதும் ஊரறிந்த உண்மையாக இருக்கும்பொழுது, பரிசோதனைச் சாலை முடிவுகளைத்தான் நம்புவோம் என வேளாண் துறை சொல்வது, மாஹிகோவைக் காப்பாற்றும் முயற்சியாக முடிந்து விடலாம்.

கோவை வேளாண் பல்கலைக்கழகம்தான் இந்த ஆய்வை நடத்தி வருகிறதாம். கோவை-ஆலந்துறையில் மரபணு மாற்றம் செய்த நெல் விதைகளை இரகசியமாக நட்டு மாஹிகோ நடத்திய பரிசோதனையை விவசாயிகள் எதிர்த்துப் போராடியபொழுது, அந்த நெல் விதைகளுக்கு நற்சான்றிதழ் கொடுத்தவர்கள் வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள். பி.டி. பருத்தி இரக விதை பற்றி இங்கு நடத்தப்படும் ஆய்வில் நியாயம் கிடைக்கும் என எப்படி நம்ப முடியும்?

எனவே, மாஹிகோவால் ஏமாற்றப்பட்ட பருத்தி விவசாயிகள், அதிகார்ரிகளிடம் மனு கொடுத்ததோடு முடங்கிப் போய் விடாமல், தொடர்ந்து போராடுவதன் மூலம் மட்டுமே நட்டஈட்டைப் பெற முடியும். புதிய தொழில் நுட்ப விதைகள் என்ற போர்வையில், இவை போன்ற மலட்டு விதைகளைப் பரிசோதித்துப் பார்க்கும் களமாக இந்தியா விவசாயம் மாற்றப்பட்டு வருகிறது. இம்மலட்டு விதைகளுக்கு எதிரான போராட்டத்தை நாடு தழுவிய அளவில் வளர்த்துச் செல்வதன் மூலம் மட்டுமே, இந்திய விவசாயத்தையும், விவசாயிகளின் எதிர்கால வாழ்க்கையையும் பாதுகாக்க முடியும்.

– வி.வி.மு., பென்னாகரம்.



மலட்டு பருத்தி விதையினால் நட்டமடைந்துள்ள விவசாயிகள், தருமபுரி வேளாண்மை துறை அலுவலகம் முன்பு நடத்திய ஆர்ப்பாட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

# இந்திய – அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்:

# அமெரிக்க அடிவருடிகளின் அரிதாரம் கலைந்தது

இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே அணுசக்தி ஒப்பந்தம் குறித்த அறிக்கை கையெழுத்தான நாளில் இருந்தே, அதனை அடிமைச் சாசனம் என அம்பலப்படுத்தி, நாம் எழுதி வருகிறோம். அதேசமயம், அமெரிக்க அடிவருடிகள் அனைவரும், ''அமெரிக்கா, இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவை வல்லரசாக்கப் போவதாக''க் கூறி, இந்திய மக்களின் காதுகளில் பூ சுற்றி வந்தார்கள். இந்தக் கெட்டிக்காரர்களின் குட்டை, இன்று அமெரிக்காவே புட்டு வைத்து விட்டது.

இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னிபந்தனையாக அமெரிக்க நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள **ஐக்கிய நாடுகள் - இந்தியா அமைதிக்கான அணுசக்தி கூட்டுறவுச் சட்டம்,** ''இந்தியா எவ்வளவு யுரேனியத்தைக் கையிருப்பில் வைத்திருக்கலாம் என்பதில் தொடங்கி இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்பது முடிய அனைத்தையும் தீர்மானிக்கும் உரிமை இனி இந்திய நாடாளுமன்றத்திற்குக் கிடையாது; அமெரிக்க நாடாளுமன்றத்திற்குத் தான் உண்டு'' எனப் பச்சையாகக் குறிப்பிட்டுள்ளது.

காலனிய ஆட்சி காலத்தில் மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் மகாராணியின் கீழ் காலனிய இந்திய அரசு செயல்பட்டதைப் போல, இப்பொழுது, அமெரிக்க நாடாளுமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் 'சுதந்திர' இந்திய அரசு செயல்பட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்துக்குக் கூடத் தெரிவிக்காமல், அமெரிக்காவில் வைத்துதான் கடந்த ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் குறித்த அறிக்கையில் மன்மோகன் சிங் கையெழுத்துப் போட்டார். இந்த அறிக்கை கையெழுத்தாகி (ஜூலை, 2005) ஒன்பது மாதங்கள் கழித்து அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் மார்ச் 2006-இல் இந்தியாவிற்கு வந்த பொழுது, அணுசக்தி ஒப்பந்தம் குறித்த கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அப்பொழுதுதான், ''இந்தியாவில் உள்ள அணு உலைகளை, சிவில் அணு உலைகள், இராணுவ அணு உலைகள் என இரண்டாகப் பிரிக்க வேண்டும்; சிவில் அணு உலைக்ளை சர்வதேச அணுசக்தி முகாமையின் கண்காணிப்புக்கு உட்படுத்த இந்தியா முன்வர வேண்டும்; அணுகுண்டுகள் தயாரிக்கத் தேவைப்படும் யுரேனிய வகைகளை உற்பத்தி செய்வதைத் தடை செய்யும் பல்நாட்டு கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்'' என்பன உள்ளிட்டு, அமெரிக்கா விதித்த பல்வேறு நிபந்தனைகளை இந்திய அரசு ஏற்றுக் கொண்டிருப்பது மறுக்க வழியின்றி அம்பலமானது. இதன் பிறகுதான், இந்திய அணு விஞ்ஞானிகள் உள்ளிட்டு பல்வேறு தரப்பினரும் இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கத் தொடங்கினர்.

இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களைச் சமாதானப்படுத்தும் முகமாக, மன்மோகன் சிங் நாடாளுமன்றக் கூட்டத்திலேயே சில வாக்குறுதிகளைக் கொடுத்தார்; அணுசக்தி விஞ்ஞானிகளையும் நேரடியாகச் சந்தித்துப் பேசியதோடு, இந்த ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் வரை பொறுமையாக இருக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். ''ஹைட் சட்டம்'' எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இந்த அமெரிக்கச் சட்டமோ, மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தின் மூலம் நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் குப்பைக் கூடைக்குள் வீசியெறிந்து விட்டது.

•••

''சமூகப் பயன்பாட்டுக்கான அணு ஆற்றல் தொடர்பாக இந்தியா மீது விதிக்கப்பட்டுள்ள அனைத்துத் தடைகளையும் நீக்க வேண்டும்; சிவில் அணு உலைகளில் பயன்படுத்தப்படும் எரிபொருளைச் செறிவூட்டுவது; கனநீரை உற்பத்தி செய்வது உள்ளிட்ட உரிமைகளை இந்தியாவிற்குத் தருவதோடு, அவற்றுக்கான தொழில்நுட்பத்தையும்; சாதனங்களையும் பெறும் உரிமை இந்தியாவிற்கு வழங்கப்பட வேண்டும்; சிவில் அணு ஆற்றல்

**''ஹைட்'' சட்டம் அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு ஓரிருநாட்கள் முன்னதாக, அச்சட்டம் குறித்து இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் சிவசங்கர் மேனனுடன் பேச்சுவார்த்தை நடத்த வந்த அமெரிக்க அரசியல் விவகாரத்துறை அமைச்சர் நிக்கோலஸ் பர்ன்ஸ் (இடது).**





படிப்பகம்

www.padippakam.com

தொடர்பாக மேலை நாடுகள் அனுபவிக்கும் அதே உரிமைகள் இந்தியாவிற்கும் கிடைக்கும் என்ற வாக்குறுதியை அமெரிக்கா வழங்க வேண்டும்'' - இது, பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் அளித்த வாக்குறுதிகளுள் ஒன்று.

அணு உலைகளில் பயன்படுத்தப்படும் எரிபொருளான யுரேனியத்தைச் செறிவூட்டவும், மீண்டும் புத்தாக்கம் செய்யவும் பயன்படும் தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் ஏற்கெனவே தன்னிறைவு அடைந்துள்ள இந்தியா, இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்காவில் இருந்து முன்னேறிய தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்து கொள்ளலாம் என எதிர்பார்த்திருந்தது. குறிப்பாக, உள்நாட்டில் வெட்டி எடுக்கப்படும் யுரேனியம் இந்தியாவின் தேவைகளை ஈடு செய்ய முடியாமல் பற்றாக்குறையாக இருப்பதால், இந்த ஒப்பந்தத்தின் மூலம் இறக்குமதி செய்யப்படும் யுரேனியத்தை எரிபொருளாகப் பயன்படுத்தியபிறகு, அதனை இந்தியாவிலேயே செறிவூட்டிக் கொள்ளும் உரிமையும் கிடைக்கும் என இந்திய அரசு எதிர்பார்த்தது.

ஆனால், அமெரிக்கச் சட்டமோ, இந்த உரிமைகளையும், இதற்கான தொழில்நுட்பத்தையும் இந்தியாவிற்கு வழங்கக் கூடாது எனத் தடை விதித்திருக்கிறது. மேலும், அமெரிக்கா உள்ளிட்டு 45 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள அணுஆற்றல் வழங்குவோர் குழுமம், இந்த உரிமையை - தொழில்நுட்பத்தை இந்தியாவிற்கு இறக்குமதி செய்து விடாமல் அமெரிக்கா பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்தியா - அமெரிக்கா இடையே அணு ஆற்றல் கூட்டுறவு தொடர்பாகப் பேச்சு வார்த்தை தொடங்கிய பொழுது, இந்தியா, ''தனது சிவில் அணு உலைகளை, தனது விருப்பப்படிதான் சர்வதேச அணு ஆற்றல் கமிசனின் கண்காணிப்புக்கு உட்படுத்தும்'' எனக் கூறியதாகவும், அதன் பின்னர்தான் தனது நிலையை மாற்றிக் கொண்டு, ''தனது சிவில் அணு உலைகளை, அவற்றின் ஆயுட்காலம் முழுவதும் எவ்வித நிபந்தனையும் இன்றி சர்வதேச அணு சக்தி முகாமையின் கண்காணிப்புக்கு உட்படுத்தச் சம்மதித்ததாகவும்'' கூறப்படுகிறது. ''இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அணு உலைகளுக்குத் தேவைப்படும் எரிபொருளை, அந்த அணுஉலைகளின் ஆயுட்காலம் முழுவதும் வழங்குவதற்கு அமெரிக்கா உறுதியளித்த பிறகே, இந்தியா தனது நிலையை மாற்றிக் கொண்டதாக'' மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.



அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் ''ஹைட்'' சட்டத்தில் கையெழுத்திடும் அதிபர் ஜார்ஜ் புஷ்.

அமெரிக்கச் சட்டமோ, ''இறக்குமதி செய்யப்படும் அணு உலைகளுக்குத் தேவையான எரிபொருளை ஆயுட்காலம் முழுவதும் வழங்குவதற்கு எவ்வித உறுதியும் அளிக்காததோடு, இந்த அணு உலைகளுக்குத் தேவைப்படும் எரிபொருளை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் இந்தியா இறக்குமதி செய்து சேமித்து வைக்கவும்'' தடை விதித்திருக்கிறது. மேலும், அமெரிக்காவை ஓரங்கட்டிவிட்டு, அணு ஆற்றல் வழங்குவோர் குழுமத்தைச் சேர்ந்த மற்ற நாடுகளிடமிருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய இந்தியா முயன்றால், அதனையும் தடுக்க வேண்டும் என இச்சட்டம் குறிப்பிடுகிறது.

அவனின்றி ஓரணுவும் அசையாது என்பது போல, அமெரிக்காவின் விருப்பம், கண்காணிப்பின்றி, இறக்குமதி செய்யப்படும் அணு உலைகளை இயக்கும் சுதந்திரத்தை இந்தியாவிற்குத் தரக்கூடாது என்பதுதான் இச்சட்டத்தின் நோக்கம்.

''அணுகுண்டு சோதனைகளை இந்தியா நடத்தியிருப்பதால், இந்தியாவிற்கு அணுஆயுத வல்லரசு என்ற தகுதி வழங்கப்பட வேண்டும்; அமெரிக்கா, ரசியா, சீனா, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய ஐந்து அணு ஆயுத வல்லரசுகளை எந்தளவிற்கு சர்வதேச அணு சக்தி கமிசன் கண்காணிக்குமோ, அதைப் போலத்தான் இந்தியாவையும் கண்காணிக்க வேண்டும்; இதற்காக, சர்வதேச அணுசக்தி கமிசனில் இந்தியாவிற்கெனத் தனி விதிமுறைகளை உருவாக்க வேண்டும்'' எனக் கோரியிருப்பதாக, மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமெரிக்கச் சட்டம் இவற்றுள் ஒன்றைக் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும், அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தம் கையெழுத்தான பிறகே, இந்தியாவின் 14 அணு ஆலைகள் அணு சக்தி கமிசனின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும் என மன்மோகன் அளித்திருந்த வாக்குறுதிக்கு மாறாக, அணுசக்தி கமிசனின் கண்காணிப்புக்கு இந்தியா உட்படுத்தப்பட்ட பிறகுதான், ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும் என அமெரிக்கச் சட்டத்தில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

''அமெரிக்காவின் கண்காணிப்பாளர்கள் இந்திய அணு உலைகள் பக்கம் சுற்றுவதை அனுமதிக்க மாட்டோம்'' என நாடாளுமன்றத்தில் சூளுரைத்தார், மன்மோகன் சிங். அமெரிக்கச் சட்டமோ, ''அமெரிக்கா அணுசக்தித் துறையைச் சேர்ந்த மூன்று நிறுவனங்கள் இந்தியாவின் சிவில் அணு உலைகளைக் கண்காணித்து, அவை பயன்படுத்தப்படும் விதம் பற்றி அமெரிக்க நாடாளுமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

''அமெரிக்க அதிபர், இந்தியாவின் அணுசக்தி பயன்பாடு குறித்து ஆண்டுதோறும் அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு நன்னடத்தைச் சான்றிதழ் தர வேண்டும்; அதன் அடிப்படையில்


படிப்பகம்

www.padippakam.com




தான் இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும்'' என்ற நிபந்தனையை அமெரிக்கா இப்பேச்சு வார்த்தையின் தொடக்கத்திலேயே விதித்தது. இந்த நிபந்தனைக்கு எதிர்க்கட்சிகளிடமிருந்தும், விஞ்ஞானிகளிடமிருந்தும் வந்த எதிர்ப்பையடுத்து, மன்மோகன் சிங், ''இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ள மாட்டோம்'' என நாடாளுமன்றத்தில் வாக்குறுதி கொடுத்தார்.

அமெரிக்கச் சட்டமோ, ''சான்றிதழ்'' என்ற வார்த்தைக்குப் பதிலாக, ''மதிப்பீடு'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதற்கு மேல், வேறெந்த சலுகையினையும் வழங்கவில்லை.

''இந்தியாவில் கட்டப்படும் புதிய அணுக்கரு உலைகள் பற்றி; அணு ஆயுத உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டால், அம்மாற்றங்கள் பற்றி; அணுகுண்டினைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருளின் சேமிப்பு பற்றி; அவை என்னென்ன வகையான மூலப்பொருள் என்பது பற்றி; சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் வராத, இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அணு உலைகளின் செயல்பாடு பற்றி; ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு யுரேனியம் இந்தியாவிலேயே வெட்டி எடுக்கப்படுகிறது; அதில் எவ்வளவு யுரேனியம் அணுகுண்டு தயாரிப்பதற்காக ஒதுக்கப்படுகிறது; அணுசக்தியின் மூலம் ஓர் ஆண்டில் எவ்வளவு யூனிட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது'' என்பது பற்றியெல்லாம் அமெரிக்க அதிபர் ''மதிப்பீடு'' செய்து அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு அறிக்கை அளிக்கவேண்டும்.

''இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்காவின் கொள்கைகளுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்; அணு ஆயுதப் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதில் இந்தியா ஒத்துழைக்க வேண்டும்.''

''பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை (அணுகுண்டு) உற்பத்தி செய்யும் முயற்சியில் இறங்கியுள்ள ஈரானைக் கட்டுப்படுத்தவும்; தேவை ஏற்பட்டால் ஈரானின் மீது பொருளாதாரத் தடை விதிக்கவும் அமெரிக்கா எடுக்கும் முயற்சிகளுக்கு, இந்தியா முழுமையாகவும், ஊக்கத்தோடும் ஒத்துழைப்புத் தர வேண்டும்'' என அமெரிக்கச் சட்டம் குறிப்பிடுகிறது. இதனைப் பச்சையாகச் சொன்னால், இந்தியா, அமெரிக்காவின் உளவாளியாக, அடியாளாகச் செயல்பட வேண்டும் என்பதுதான்.

இந்தியா வருங்காலத்தில் புதிதாக அணுகுண்டு சோதனைகளை நடத்தாமல் தடுப்பதற்காக, ''அணுகுண்டு தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருட்களை உற்பத்தி செய்வதைத் தடை செய்யும் சர்வதேச ஒப்பந்தத்தை உருவாக்க அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகளில் இந்தியாவும் ஒத்துழைக்க வேண்டும்'' எனக் குறிப்பிடும் இச்சட்டம், ''எந்தக் காரணத்தை முன்னிட்டாவது, இந்தியா மீண்டும் அணு ஆயுதச் சோதனைகளை நடத்துமானால், அமெரிக்கா - இந்தியா அணுசக்தி கூட்டுறவு ஒப்பந்தத்தை, அமெரிக்கா ஒருதலைபட்சமாக முறித்துக் கொள்ளலாம்; இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கு அளித்த சாதனங்கள் அனைத்தையும், அமெரிக்கா திரும்பப் பெற்றுவிட வேண்டும்; ஒப்பந்தம் முறிந்து போன பிறகும்கூட, இந்தியாவின் சிவில் அணுஉலைகளை மூன்றாவது நபர்கள் கண்காணிப்பதை அமெரிக்கா உறுதி செய்து கொள்ள வேண்டும்'' என நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

•••

இந்தியாவின் அரைகுறை இறையாண்மையைக் கூட உருவிக் கொண்டு விட்ட இந்தச் சட்டம், இந்திய அரசிற்கும் - அமெரிக்க அரசிற்கும் இடையே கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடந்து வரும் இரகசியப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி - போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எல்லா வண்ண ஓட்டுக் கட்சிகளுமே, இந்த விசயம் குறித்து கூட்டுக் களவாணிகளாகத்தான் செயல்பட்டு வந்துள்ளன.

அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான என்ரானையே தூக்கியெறியத் தெம்பில்லாத பா.ஜ.க., இந்த ஒப்பந்தத்தில் இருந்து இந்தியா வெளியேற வேண்டும் எனக் கோருவதை, கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் கதையோடுதான் ஒப்பிட முடியும்.

1998-இல் பா.ஜ.க. ஆட்சியில் இரண்டாம் முறையாக அணுகுண்டு சோதனை நடத்தியபின், ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதாரத் தடையில் இருந்து தப்பிக்க, அப்பொழுது பிரதமராக இருந்த வாஜ்பாயி, ''இனி இந்தியா அணுகுண்டுப் பரிசோதனை நடத்தாது'' என ஐ.நா. மன்றத்திலேயே வாக்குறுதி அளித்தார். அப்பொழுது பாதுகாப்புத்துறை ஆலோசகராக இருந்த பிரஜேஷ் மிஸ்ரா, இந்தியாவின் அணு உலைகளைக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரச் சம்மதிப்பதாக, அமெரிக்காவின் உள்துறைச் செயலராக இருந்த காலின் பாவெல்லிடம் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் உருவாவதற்கு இவைதான் அடிப்படைகள் என்கிறது அமெரிக்கா. அணுசக்தி ஒப்பந்தம் குறித்து பா.ஜ.க. போட்டுச் சென்ற கோட்டில், காங்கிரசு ரோடு போட்டு விட்டது என்பதுதான் உண்மை.

•••

இந்த ஒப்பந்தம் இந்தியாவின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யவோ, இந்தியாவை வல்லரசாக்கும் நோக்கத்திற்காகவோ உருவாக்கப்படவில்லை. இந்தியா - பாகிஸ்தான் - ஈரான் நாடுகளிடையே உருவாகவிருந்த எரிவாயு ஒப்பந்தத்தைத் தகர்ப்பதற்காக அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட அரசுதந்திரம்தான் இந்த ஒப்பந்தம்.

''ஈரானுடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டால், இந்தியாவிற்கு அணுசக்தி துறையில் உதவுவோம்; இந்தியாவை வல்லரசாக்குவோம்'' என ஆசைகாட்டிய அமெரிக்கா, ''இதற்கு


படிப்பகம்

மறுத்தால், இந்தியா மீது பொருளாதாரத் தடை விதிப்போம்'' என கடந்த மார்ச் 2005-இல் மிரட்டல் விட்டது.

இது ஒருபுறமிருக்க, ''புதிய நூற்றாண்டுக்கான அமெரிக்காவின் திட்டம்'' ஆசியாவில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தக் கோருகிறது. அமெரிக்காவின் இந்த மேலாதிக்க நோக்கத்திற்கு இந்தியாவை அடியாளாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறது. அமெரிக்கா. ஏற்கெனவே சீன எதிர்ப்பில் மூழ்கிப் போயிருக்கும் இந்தியா; தெற்காசியாவில் அமெரிக்காவின் அடியாளாக அங்கீகாரம் பெறுவதற்கு ஏங்கிக் கொண்டிருந்த இந்தியா, அமெரிக்கா வீசியெறிந்த இந்த எலும்புத் துண்டை, அணுசக்தி ஒப்பந்தத்தைப் பிடித்துக் கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கா - இந்தியா இடையே நடக்கவிருக்கும் அணுசக்தி வியாபாரத்தில் தனியார் முதலாளிகளும் பங்கு பெறலாம் என்பதால், இந்தியத் தரகு முதலாளிகள் அனைவரும் இந்த ஒப்பந்தத்தை வரவேற்கிறார்கள். 4,50,000 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இந்த வியாபாரத்தின் மூலம் கிடைக்கும் இலாபத்திற்காகவே, ''இறையாண்மை, சுயசார்பு'' போன்ற பழைய முகமூடிகளை அவிழ்த்து வீசிவிடத் தயாராகி வருகிறார்கள்.

அதனால்தான், நாட்டின் சுயமரியாதைக்கே எதிராக உள்ள இந்தச் சட்டத்தை வெளிப்படையாக எதிர்க்கத் துணியாத மன்மோகன் சிங் கும்பல், ''இந்தச் சட்டம் அமெரிக்க அதிபரைத்தான் கட்டுப்படுத்தும்; இந்தியாவை அல்ல'' என சால்ஜாப்பு சொல்கிறார். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் இந்தியா - அமெரிக்கா இடையே உருவாகவுள்ள ''123 ஒப்பந்தத்தில்'' [*''ஹைட்'' சட்டத்தின் அடிப்படையில் இந்தியா - அமெரிக்கா இடையே கையெழுத்தாகவிருக்கும் ஒப்பந்தத்தின் பெயர் தான் '123 ஒப்பந்தம்'. இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகுதான் இந்தியா-அமெரிக்கா இடையே அணுசக்தி கூட்டுறவும், வர்த்தகமும் தொடங்கப்படும்.*] இந்த விதிகளைச் சேர்க்க அனுமதிக்க மாட்டோம் என வீராப்பு பேசுகிறார்.

''அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு இந்தியா பணிந்து போன இரகசியம் மார்ச் மாதம் அம்பலமானபொழுது, அமெரிக்கச் சட்டம் வரட்டும் எனக் கூறி நம்மை முட்டாளாக்கினார்கள்; அமெரிக்க சட்டம் வந்த பிறகு '123 ஒப்பந்தம்' வரட்டும் எனக் கூறி நம்மை முட்டாளாக்கப் பார்க்கிறார்கள்'' என மன்மோகன் சிங்கின் வீராப்பை பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் இயக்குனர் ஏ.என். பிரசாத் அம்பலப்படுத்துகிறார்.

சர்வதேச அணுசக்தி கமிசனில் ஈரானுக்கு எதிராக இந்தியா மூன்று முறை வாக்களித்தது; ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தற்காலிக உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்ட வெனிசுலாவிற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என வெள்ளை மாளிகையில் இருந்துவந்த தொலைபேசி மிரட்டலைப் பூசி மெழுகியது போன்ற விவகாரங்கள், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை அமெரிக்காதான் தீர்மானிக்கிறது என்பதை ஏற்கெனவே அம்பலப்படுத்தியுள்ளன.

அமெரிக்காவின் ஆதரவு பெற்ற பாகிஸ்தான் மீது இந்தியா ஒரு துப்பாக்கி ரவையைக் கூடச் சுட முடியாது என்ற கேவலமான உண்மையும், நாடாளுமன்றத் தாக்குதலின் பின் நடத்தப்பட்ட படை திரட்டலின் பொழுது பச்சையாகத் தெரிந்துவிட்டது. எனவே, புதிய அணுகுண்டு சோதனைகள் நடத்த வேண்டிய தேவையும் இந்தியாவிற்குக் கிடையாது.

இப்படிப்பட்ட நிலையில், அமெரிக்கச் சட்டத்தில் உள்ள நிபந்தனைகள், ''123 ஒப்பந்தத்தில்'' சேர்க்கப்பட்டாலும், சேர்க்கப்படாவிட்டாலும், இந்தியாவின் அமெரிக்க அடிவருடித்தனத்தில் எந்த மாற்றமும் வந்துவிடாது என்பதே உண்மை.

தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் நாடே மறுகாலனியாக்கப்பட்டு வரும் வேளையில், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையும், அணுசக்திக் கொள்கையும் மட்டும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீடின்றிச் சுதந்திரமாக இயங்க முடியும் என நம்புவதைவிட முட்டாள்தனம் வேறெதுவும் இருக்க முடியாது. ஆனால், போலி கம்யூனிஸ்டுகளோ, கடந்த ஆண்டு ஜூலையில் புஷ்ஷுக்கும், மன்மோகன் சிங்குக்கும் இடையே கையெழுத்தான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே, அமெரிக்கச் சட்டமும், 123 ஒப்பந்தமும் இருக்க வேண்டும் எனக் கூச்சல் போடுகிறார்கள். அடியாளாக இருந்தாலும், கொஞ்சம் கௌரவமான அடியாளாக இருக்க வேண்டும். (இசுரேலைப் போல!) என்பதுதவிர, இந்த எதிர்ப்புக்கு வேறு பொருள் கிடையாது.

● செல்வம்


**புதிய வெளியீடுகள்...**
**புதிய பதிப்புகள்...**
**புதிய சிந்தனைக்கு...**



**மாபெரும் தெலுங்கானா போராட்டம்**

விலை : ரூ. 20/-

**காந்தியும் காங்கிரசும் - ஒரு துரோக வரலாறு**



விலை : ரூ. 15/-



**இந்திய மரபும் பார்ப்பன திரிபும்**

*- பேரா. பெரியார்தாசன்*

விலை : ரூ. 12/-

**மனித சாரத்தை மறுப்பதே உலகமயமாக்கம்**

*- பி. இரயாகரன்*



விலை : ரூ. 100/-

- மகத்தான வர்க்கப் போராட்டத்தின் தியாகம்
- காந்தி காங்கிரசின் மாபெரும் வரலாற்றுத் துரோகம்
- இந்தியாவே தாங்கள்தான் என்று திரிக்கும் பார்ப்பனியம்
- உலகையே உறிஞ்சத் துடிக்கும் உலகமயமாக்கம்

அஞ்சலில் நூல் வேண்டுவோர், நூலின் விலையுடன் ரூ. 20/- சேர்த்து பணவிடை (M.O.) செய்க.

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா சாகிபு தெரு,**
**எல்லீசு சாலை, சென்னை - 2.**
✆: 044-28412367

www.padippakam.com

# அழிவை நோக்கித் தள்ளப்படும் சில்லறை வியாபாரம்

**சி**ல்லறை வியாபாரத்தில் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் நுழைந்திருப்பது; அமெரிக்காவின் சில்லறை விய்ாபார நிறுவனமான வால்-மார்ட்டும், இந்தியாவின் பாரதி நிறுவனமும் இணைந்து இந்தியாவில் சில்லறை வியாபாரத்தில் இறங்க முடிவெடுத்திருப்பது; இங்கிலாந்தின் டெஸ்கோ மற்றும் கேரிஃபோர் ஆகிய வெளிநாட்டு நிறுவனங்கள், இந்திய நிறுவனங்களோடு கூட்டுச் சேர்ந்து சில்லறை வியாபாரத்தில் இறங்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருவது — இவற்றையெல்லாம் காட்டி இந்தியாவின் சில்லறை வியாபாரத் துறையில் ஓர் அமைதி புரட்சி நடந்து வருவதாகத் தாராளமயத்தின் ஆதரவாளர்கள் பீற்றி வருகின்றனர்.

உணவுப் பொருட்கள் உள்ளிட்டு, பல்வேறு விதமான மளிகைச் சாமான்கள், நுகர்பொருட்களை விற்கும் சில்லறை வியாபாரத்தில் அந்நிய நிறுவனங்கள் நேரடியாக மூலதனமிட இன்னும் அனுமதிக்கப்படவில்லைதான். எனினும், ஒரே நிறுவனத் தயாரிப்புகளை விற்கும் பேரங்காடிகளைத் திறந்து நடத்தவும்; மொத்த வியாபாரத்திலும்; பொருட்களை வாங்கிச் சேமித்து வைக்கும் பண்டகசாலைகள் நடத்துவதிலும் 51 சதவீதம் வரை முதலீடு போட அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொல்லைப்புற வழியைப் பயன்படுத்திக் கொண்டு அந்நிய நிறுவனங்கள் மளிகைக் கடை நடத்துவதிலும் இறங்கிவிட முயலுகின்றன.

சில்லறை வியாபாரத்தில் வால்-மார்ட்டுக்கும், பாரதி நிறுவனத்துக்கும் இடையே உருவாகியுள்ள ஒப்பந்தம் இப்படிபட்டதுதான். பாரதி நிறுவனம் நேரடியாக கடைகளைத் திறந்து நடத்தும்; வால்-மார்ட் கொள்முதல் செய்து கொடுக்கும் என்று கூறப்படுகிறது. சில்லறை வியாபாரத்தில் 450 கோடி ரூபாயை முதலீடு செய்யவுள்ள வால்-மார்ட் - பாரதி கூட்டின் முதல் கடை 2007-ஆம் ஆண்டு இந்திய 'சுதந்திர' நாளன்று திறக்கப்படுமாம்.

இந்தியா முழுவதிலும் 2011-ஆம் ஆண்டுக்குள் ஏறத்தாழ 3,000 கடைகளைத் திறக்கத் திட்டமிட்டுள்ள ரிலையன்ஸ், இத்துறையில் 25,000 கோடி ரூபாய் மூலதனமிடப் போவதாக அறிவித்திருக்கிறது. டெல்லி, மும்பய், சென்னை போன்ற பெரு நகரங்களில் மட்டுமல்ல, ஆண்டிப்பட்டி போன்ற சிறு சந்தை நகரங்களில் கூட பேரங்காடிகளைத் (சூப்பர் மார்க்கெட்டுகள்) திறக்க இவர்கள் திட்டமிட்டுள்ளனர். முதலாளித்துவ நிறுவனங்களால் திறக்கப்படவுள்ள பேரங்காடிகளில் ஏறத்தாழ 35 சதவீதக் கடைகள் சிறு நகரங்களைக் குறி வைத்திருப்பதாக ''பிஸினஸ் வேர்ல்டு'' என்ற பத்திரிகை குறிப்பிடுகிறது. ரிலையன்ஸ் நிறுவனம், தமிழகத்தில் மட்டும், 75 நகரங்களில், 380 பேரங்காடிகளையும், 85 மீ அங்காடிகளையும் (ஹைப்பர் மார்க்கெட்) திறக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தியாவில் 1,000 பேருக்கு 11 சில்லறை வியாபாரக் கடைகள் நடத்தப்படுகின்றன. வால்-மார்ட் பிறந்த அமெரிக்காவிலோ இந்த எண்ணிக்கை 4 தான். சில்லறை வியாபாரத்தில் இந்தியா அமெரிக்காவைப் போல ஆக வேண்டுமென்றால், 11-ஐ 4-ஆகக் குறைக்க வேண்டும். சில்லறை வியாபாரத்தில் நடந்துவரும் அமைதி புரட்சியின் பின்னுள்ள பேராபத்து இதுதான்.

எங்களின் கடைகளின் மூலம் 5 இலட்சம் பேருக்கு நேரடி வாய்ப்புகள் வழங்குவோம் என்கிறது ரிலையன்ஸ். ஆனால், எத்தனை இலட்சம் பேரின் வேலை வாய்ப்பு பறிபோகும் என்பது இதோடு தொடர்புடைய இன்னொரு கேள்வி. தற்பொழுது சில்லறை வியாபாரத்தில் 6 சதவீதத்தைக் கைப்பற்றியுள்ள சூப்பர்-மார்க்கெட்டுகளின் பங்கு 20 சதவீதமாக வளரும்பொழுது, இந்தியாவெங்கும் 80 இலட்சம் கடைச் சிப்பந்திகளின் வேலை வாய்ப்பு பறிபோகும் என முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களே எச்சரிக்கிறார்கள்.

சிறிய கடைகளைவிட, சூப்பர் மார்க்கெட்டுகளில் பொருட்களின் விலை மலிவாக இருக்கும் எனா கவர்ச்சிகரமாக விளமபரம் செய்யப்படுகிறது. சுபிக்ஷா, த்ரிநேத்ரா, ஃபுட் வேர்ல்டு போன்ற நிறுவனங்கள், 50 பைசா, ஒரு ரூபாய் எனத் தள்ளுபடி செய்து நுகர் பொருட்களை விற்று வருவது, சிறு வியாபாரிகளை ஒழித்துக் கட்டும் வியாபாரத் தந்திரம்தானே தவிர வேறில்லை.

இது ஒருபுறமிருக்க, கடந்த மூன்று, நான்கு மாதங்களாக மிளகாய் வத்தல், புளி, பருப்பு, எண்ணெய் வித்துகள் போன்ற உணவுப் பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்து

தமிழக விவசாயிகளிடமிருந்து வேளாண் பொருட்களைக் கொள்முதல் செய்யும் திட்டம் குறித்து முதல்வர் கருணாநிதியுடன் பேச்சு வார்த்தை நடத்த வந்த தரகு முதலாளி முகேஷ் அம்பானி.





படிப்பகம்

www.padippakam.com

வருவதற்கு, சில்லறை வியாபாரத்தில் நுழைந்துள்ள இந்நிறுவனங்கள் இந்தப் பொருட்களை வாங்கிப் பதுக்கி வைத்திருப்பதும் ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது.

ரிலையன்ஸும், பாரதியும் இன்னும் ஒருபடி மேல் போய் அரிசி, கோதுமை, மிளகாய், பழங்கள் உள்ளிட்டு விவசாய விளைபொருட்கள் அனைத்தையும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யும் புதிய கமிசன் மண்டி வியாபாரிகளாக அவதாரமெடுக்கப் போகின்றன.

ரிலையன்ஸ் நிறுவனம், விவசாய விளைபொருட்களின் கொள்முதலுக்காக, தமிழ்நாட்டில் மட்டும் 40 கிராமப்புற வர்த்தக மையங்களையும், 160 துணை நிலையங்களையும் ஏற்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறது. வால்-மார்ட்டுடன் இணைந்துள்ள பாரதி, பஞ்சாப் மாநிலத்தில் 5000 ஏக்கர் பரப்பளவில் ஒப்பந்த விவசாயத்தில் ஈடுபட்டுள்ளது.

இந்நிறுவனங்கள் வியாபாரத்தின் இரு முனைகளிலும் - கொள்முதலிலும், விற்பனையிலும் - ஏகபோக ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகும் பொழுது, அரிசி, கோதுமை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை தங்கள் வசதிக்கேற்ப இந்நிறுவனங்கள்தான் தீர்மானிக்கும் நிலை உருவாகி விடும்; இதன் மூலம், விவசாயிகளையும் நுகர்வோரையும் மட்டுமல்ல, இந்நிறுவனங்களோடு போட்டி போடும் மற்ற சில்லறை வணிகர்களையும் கட்டுப்படுத்தக் கூடிய சக்திகளாக இந்நிறுவனங்கள் மாறிவிடும். அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தை நீக்க வேண்டும் என இந்நிறுவனங்கள் அரசுக்கு நெருக்கடி கொடுத்து வருவதை இந்தப் பின்னணியில் வைத்துதான் பார்க்க வேண்டும்.

•••

**ச**மீபத்தில், தில்லி நகரில் உள்ள 2,250 தெருக்களில் பல ஆண்டுகளாக நடந்து வந்த ஆயிரக்கணக்கான சிறிய - நடுத்தர கடைகளைப் பூட்டி ''சீல்'' வைத்துவிட்டது, தில்லி அரசு. இந்தக் கடைகள் அனைத்தும் குடியிருப்புப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்தவை என உச்சநீதி மன்றம் ''குற்றம்'' கண்டுபிடித்து, அவற்றை நிரந்தரமாக மூடிவிட உத்தரவிட்டது.

பல ஆண்டுகளாக வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, கருப்புப் பணத்தைக் குவித்து வைத்திருக்கும் முதலாளிகளுக்குக் கூடப் பொது மன்னிப்பு வழங்கியிருக்கும் மைய அரசு, ''சட்ட விரோதமாகக் கடைகள் நடத்தி வந்த குற்றத்தை'' மட்டும் ஏன் மன்னிக்க மறுக்கிறது? அந்த வியாபாரிகளுள் யாரும் கஞ்சா, அபின் போன்ற சட்ட விரோதப் பொருட்களை விற்கவில்லையே?




''வாட்'' வரியை எதிர்த்துப் போராடுவது சட்ட விரோதமாகக் கருதப்படும் என எச்சரித்துத் தமிழக அரசு வெளியிட்டுள்ள விளம்பரம்.

சில்லறை வியாபாரத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு வசதியாக, 'சுதந்திரத்திற்கு'ப் பின் போடப்பட்ட சட்டங்களையெல்லாம் மாற்றும் அரசு, 'இச்சட்ட விரோதக் கடைகளை' அங்கீகரிக்க சட்டத்திருத்தம் செய்ய மறுப்பது ஏன்?

தில்லியின் 2,250 தெருக்களில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக, இந்தச் சில்லறை வியாபாரக்கடைகள் இழுத்து மூடப்படவில்லை. அரசின் இந்த நடவடிக்கையின் பின்னே சூப்பர் மார்க்கெட்டுகளின் நலன் ஒளிந்திருக்கிறது என்பதே உண்மை.

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பார்கள். அதுபோல, சில்லறை வியாபாரத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு அனுமதியளிக்கும் முன்பாகவே, சிறிய வணிகர்களுக்கு எதிரான வரி விதிப்பை — ''வாட்'' வரியைக் கொண்டு வந்துவிட்டது, மைய அரசு.

ஏகாதிபத்தியங்களின் நலனுக்காகத் திணிக்கப்படும் இந்த ''வாட்'' வரி விதிப்பை எதிர்த்து சிறு வணிர்கள் இந்தியாவெங்கிலும் போராடி வருகிறார்கள். ''வாட்'' வரி விதிப்பை எதிர்க்கும் இவர்களைப் பொதுமக்களின் மத்தியில் வில்லனாகக் காட்ட வேண்டும் என்பதற்காகவே, ''இவ்வரி விதிப்பு முறையில் வரி ஏய்ப்பு செய்ய முடியாது; பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி குறைந்து, பொருட்கள் விலை மலிவாகக் கிடைக்கும்'' என்ற பிரச்சாரத்தைத் தீவிரமாக நடத்தி வருகிறது, ஆளும் கும்பல்.

பொருளின் அடக்கவிலை தாறுமாறாக உயர்ந்து கொண்டே போவதைத் தடுக்க வக்கற்ற அரசு, அவற்றின் மீது விதிக்கப்படும் வரியைக் குறைப்பதாகக் கூறுவது, அழும் குழந்தையை ஏமாற்ற மிட்டாயைக் கொடுப்பது போன்றதுதான்.

இந்த வரி அமலில் உள்ள பிரிட்டனில், ஜூன் 2005-லிருந்து ஜூன் 2006 வரை உள்ள ஓராண்டில் மட்டும் 7,18,200 கோடி ரூபாய்க்கும், ஸ்பெயினில் 14,820 கோடி ரூபாய்க்கும்; இத்தாலியில் 13,110 கோடி ரூபாய்க்கும்; ஜெர்மனியில் 10,830 கோடி ரூபாய்க்கும்; பிரான்சில் 8,550 கோடி ரூபாய்க்கும் வரி ஏய்ப்பு நடந்துள்ளதாக பெல்ஜியத்தைச் சேர்ந்த வரி ஏய்ப்புத் தடுப்புப் படை அம்பலப்படுத்தியிருக்கிறது. வரி ஏய்ப்பு செய்ய ஓட்டைகளே இல்லையென்றால், அதிகார வர்க்கமும் தரகு முதலாளிகளுமே இந்த ''வாட்'' வரி விதிப்புக்கு எதிராக நின்றிருப்பார்கள்.

''வாட்'' வரி எதிர்ப்புப் போராட்டங்களில் இந்தியாவிலேயே தமிழகம் தான் முன்னோடியாக இருந்து வருகிறது. தமிழகத்தில் சனவரி 1, 2007 முதல் ''வாட்'' வரியை அமல்படுத்தியே தீர வேண்டும் எனப் பிடிவாதமாக இருக்கும் தி.மு.க. அரசு, இவ்வரி விதிப்பை எதிர்த்துப் போராடுவதைச் சட்டவிரோதமாக அறிவித்துவிட்டது.

ஜெயா ஆட்சியில் கூட ''வாட்''டை எதிர்த்துப் போராடிய சிறு வணிகர்களுக்கு எதிராக இப்படியொரு பாசிச அச்சுறுத்தல், அரசு விளம்பரமாக வெளியிடப்படவில்லை. அந்த வகையில் கருணாநிதியின் ஆட்சி, பாசிச ஜெயாவுக்கே முன்னோடியாகவும்; சிறு வணிகர்களுக்கு எதிரானதாகவும் அமைந்துவிட்டது.

**• செல்வம்**


படிப்பகம்

www.padippakam.com

## மருந்து விலை கட்டுப்பாடு சட்டம்:

# கொள்ளைக்காரனின் வள்ளல் வேடம்

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்து விட்ட நிலையில், மத்திய அமைச்சரான ராம்விலாஸ் பாஸ்வான் அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளதாகவும், இந்த விலைக் குறைப்பை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கடந்த நவம்பரில் அறிவித்தார். நாட்டை மீண்டும் காலனியாக்கி மக்களை மரணக் குழியில் தள்ளி வரும் காங்கிரசுக் கூட்டணி ஆட்சியாளர்களுக்கு மக்கள் நலனில் திடீரென அக்கறை வந்துவிட்டதோ என்று பலரும் ஆச்சரியப்பட்டனர். ஆனால், இந்த விலைக் குறைப்பு என்பது மோசடித்தனமானது என்றும் பன்னாட்டு-உள்நாட்டு ஏகபோக மருந்துக் கம்பெனிகளின் பகற்கொள்ளைக்குப் பச்சைக் கொடி காட்டும் நடவடிக்கைதான் என்பதும் வெகு விரைவிலேயே அம்பலமாகி விட்டது.

விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக பட்டியலிடப்பட்டுள்ள 886 வகையான மருந்துகளும் 11 பன்னாட்டு ஏகபோக கம்பெனிகள் தயாரிக்கும் விலை அதிகமுள்ள மருந்துகளாகும். பெரும்பாலான மருத்துவர்கள் உள்நாட்டு மருந்துகளையே நோயாளிகளுக்குப் பரிந்துரைக்கின்றனர். அத்தகைய மருந்துகளின் விலைகளைக் குறைக்க மைய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உபயோகத்தில் இல்லாத, பரவலாகக் கடைகளில் கிடைக்காத, விலை அதிகமாக உள்ள மருந்துகளின் விலையை மட்டுமே — அதுவும் 5 முதல் 10 சதவீத அளவுக்கு மட்டுமே அரசு குறைத்துள்ளது. அதிகம் பயன்பாட்டில் உள்ள மருந்துகளின் விலைகள் மிகமிக அற்பமான அளவுக்கே குறைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, இமிடேல் என்ற ஊசி மருந்து ஏற்கெனவே ரூ. 4.99-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது அதன் விலை ஒரு பைசா குறைக்கப்பட்டு ரூ. 4.98 என அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல ரான்கோல்ட் பிளஸ் 10 மாத்திரைகளின் விலை ரூ. 18.11-க்கு விற்பனையாகி வந்தது. இதன் விலை தற்போது ரூ. 17.51-ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, 10 மாத்திரைகளின் விலையில் 60 பைசா குறைந்துள்ளது. சாமானிய மக்கள் கடையில் ஒன்றிரண்டு மாத்திரைதான் வாங்குகின்றனர். ஒரு பைசா, இரண்டு பைசா சில்லறையுடன் போய் இரண்டு மாத்திரை வாங்கினால் மட்டுமே அமைச்சர் கூறியபடி இந்த விலைக் குறைப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இல்லையேல், இந்த விலைக் குறைப்பினால் சாமானிய மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்காது. இதுதான் விலைக் குறைப்பின் பின்னேயுள்ள மோசடி.

உண்மைகள் மருந்தைப் போலவே கசப்பாகவே இருக்கின்றன. உலகின் பெரும் கோடீசுவரர்கள் வரிசையில் இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளும் இடம் பெறும் அளவுக்கு, இந்தியா 'பணக்கார - வல்லரசு' நாடாக வளர்ந்து வருவதாக ஆட்சியாளர்கள் பெருமிதம் கொள்கின்றனர். ஆனால், இந்நாட்டில்தான் ஏறத்தாழ 65 கோடி மக்கள் அத்தியாவசிய மருந்துகளைக் கூட வாங்குவதற்கான வாய்ப்பு - வசதி இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரும் மருந்து உற்பத்தி ஆலைகளைக் கொண்ட நாடாக இந்தியா உள்ள போதிலும், கோடிக்கணக்கான மக்களுக்கு அத்தியாவசிய மருந்துகள் கூட கிடைப்பதில்லை என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) தனது 2004-ஆம் ஆண்டின் அறிக்கையில் குறிப்பிடுகிறது.

இந்த அவல நிலைக்குக் காரணம், தனியார்மயம். உலகின் தனியார்மயமாக்கப்பட்ட மருத்துவ - சுகாதாரத் துறையில், ஏழை நாடான இந்தியா முன்னணியில் உள்ளது. மணற் கொள்ளை, நிலக் கொள்ளை, கடற் கொள்ளை முதலானவற்றையெல்லாம் விஞ்சும் வகையில் இந்தியாவில் மருந்துக் கொள்ளை கேள்விமுறையின்றித் தொடர்கிறது. இந்தியாவில் ஓராண்டுக்கு ஏறத்தாழ 45 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மருந்து - மாத்திரை வியாபாரம் நடக்கிறது. இதில் பன்னாட்டு - உள்நாட்டு ஏகபோக மருந்துக் கம்பெனிகள் ஏறத்தாழ 25 ஆயிரம் கோடிக்கு வியாபாரம் செய்கின்றன. இக்கம்பெனிகள் தயாரிக்கும் மருந்துகளின் விலை பலமடங்கு அதிகமாக உள்ளது. உதாரணமாக, அவந்திஸ் நிறுவனத்தின் லெவோப்ளாசின் என்னும் ஆன்டிபயோட்டிக் மாத்திரையின் விலை ரூ.95. அதே மாத்திரையை, அதே தரத்துடன் உள்நாட்டு சில்பா மருந்து நிறுவனம் ரூ.6.80-க்கு விற்கிறது. இந்திய அரசோ இப்படி அநியாய விலை விற்கும் அன்னிய நிறுவன மருந்துக்குத் தடையோ கட்டுப்பாடோ விதிப்பதில்லை.

அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு விதிக்கும் கொள்கையைப் பின்பற்றி வந்த அரசு, தனியார்மய - தாராளமயமாக்கலைத் தொடர்ந்து படிப்படியாக இக்கொள்கையை நீர்த்துப் போகச் செய்து விட்டது. 1977-ஆம் ஆண்டில் 347 அத்தியாவசிய மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தன. 1995-இல் இது வெறும் 74 மருந்துகள் என்று சுருங்கிப் போனது. அதன்பிறகு கடந்த 12 ஆண்டுகளாக புதிதாக எந்த மருந்தும் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவில்லை. மருந்துக் கம்பெனிகள் தாறுமாறாக விலையேற்றி கேள்விமுறையின்றி கொள்ளையடித்தன.

முந்தைய பா.ஜ.க. அரசு 2002-ஆம் ஆண்டில் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டிருந்த இந்த 74 அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலை 30-ஆகக் குறைக்கக் கிளம்பியது. கர்நாடக உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி, இதை நடைமுறைப்படுத்தாமல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இத்தீர்ப்பின்படி, அரசு உருவாக்கிய மருத்துவ நிபுணர்கள் குழு, தேசிய அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலை 2003-ஆம் ஆண்டில் தயாரித்துக் கொடுத்தது. இதில் 354 வகையான மருந்துகள் பட்டியலிடப்பட்டிருந்தன. இருப்பினும், இப்பட்டியலின்படி விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கையை



படிப்பகம்

பா.ஜ.க. அரசு அறிவிக்கவோ, செயல்படுத்தவோ முன்வராமல் கிடப்பில் போட்டது.

பின்னர் ஆட்சிக்கு வந்த காங்கிரசு கூட்டணி அரசு, ஈராண்டு காலமாக இழுத்தடித்து விட்டு, கடந்த ஜூலையில் வழக்கத்துக்கு மாறாக தவணை முறையில் நகல் மருந்துக் கொள்கையை வெளியிட்டது. மைய அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான், இக்கொள்கைப்படி விலைக் கட்டுப்பாடு பட்டியலில் 354 அத்தியாவசிய மருந்துகளைக் குறிப்பிட்டு அமைச்சரவையில் சமர்ப்பித்தார். ஆனால், அவரது அமைச்சரவையே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, விலைக் கட்டுப்பாட்டிலுள்ள அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலைப் பெருமளவுக்குக் குறைக்கக் கோரியது. இதனைப் பரிசீலித்து விலைக் கட்டுப்பாடு பட்டியலைத் தயாரிக்க 14 பேர் கொண்ட கூட்டுக் கமிட்டியை மைய அரசு நிறுவியது. இந்தக் கமிட்டியிலுள்ள 14 பேரில் 11 பேர் ஏகபோக மருந்துக் கம்பெனிகளின் பிரதிநிதிகள். மீதி 3 பேர் மட்டுமே அரசாங்கத்தின் பிரதிநிதிகள். ஏகபோக மருந்துக் கம்பெனிகளின் ஆதிக்கத்தின் கீழுள்ள இந்தக் கமிட்டி மக்கள் நலனை முன்வைத்து அத்தியாவசிய மருந்துகளுக்கு விலைக் கட்டுப்பாட்டை கொண்டுவரும் என்று முட்டாள்கள்கூட நம்ப மாட்டார்கள்.

மைய அரசு ஜூலையில் வெளியிட்ட நகல் மருந்துக் கொள்கை அறிக்கையானது, மருந்துக் கம்பெனிகள் உற்பத்தி செலவுக்கு மேல் 200% வரை இலாபம் வைத்து விற்கலாம் என்று விலை நிர்ணய முறைக்கு ஆலோசனை கூறுகிறது. இதுவே மிக அநியாயமான பகற்கொள்ளைதான். ஆனால், ஏகபோக மருந்துக் கம்பெனிகள் இந்த விலை நிர்ணய முறையைக்கூட ஏற்க மறுத்துவிட்டன. இப்படிச் செய்தால் இலாபம் குறைந்து ஆலையை மூட நேரிடும்; ஏற்றுமதி வாய்ப்புகள் குறையும்; புதிய மருந்துக்கான ஆராய்ச்சியும் வளர்ச்சியும் குறைந்துவிடும்; நாட்டுக்கு மருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும் என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றன. இருப்பினும், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, மருந்துகளை சில்லறை விற்பனை விலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராமல், பொதுவில் 5 முதல் 10 சதவீதம் வரை விலையைக் குறைப்பதாக இம்மருந்துக் கம்பெனிகள் அறிவித்தன. இதன்படியே 886 வகையான மருந்துகளின் விலையைக் குறைத்துவிட்டதாகவும், மக்கள் இதைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் மைய அமைச்சர் அறிவித்துள்ளார்.



**1977-ஆம் ஆண்டில் 347 அத்தியாவசிய மருந்துகள் விலைக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தன. 1995-இல் இது வெறும் 74 மருந்துகள் என்று சுருங்கிப் போனது. அதன்பிறகு கடந்த 12 ஆண்டுகளாக புதிதாக எந்த மருந்தும் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவில்லை.**

விலைக் கட்டுப்பாட்டுக்குள் அத்தியாவசிய மருந்துகள் இல்லாததாலும், மருந்துகளின் விலை தாறுமாறாக உயர்ந்துவிட்டதாலும் சாதாரண நோய்களுக்கே கூட சாமானிய மக்கள் நூற்றுக்கணக்கான ரூபாய்களைச் செலவிட வேண்டியுள்ளது. விலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டிய அத்தியாவசிய மருந்துகள் என அரசு முன்வைத்துள்ள நகல் கொள்கை அறிக்கையில் கூட, காசநோய், மலேரியா, ரத்தசோகை, சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு முதலான நோய்களுக்கான மருந்துகளே இல்லை. வாந்தி - பேதியால் அவதிப்படும் நோயாளிகளுக்கு அவசியமான உப்பு - சர்க்கரை கரைசல் பொடி கூட விலைக் கட்டுப்பாடு பட்டியலில் இல்லை. இதுதவிர இன்னும் ஏராளமான உயிர் காக்கும் மருந்துகள் இந்தப் பட்டியலுக்குள் கொண்டு வரப்படவில்லை. இதனால் அநியாய விலை விற்கும் மருந்துகளை வாங்க முடியாமல் கோடிக்கணக்கான மக்கள் அவதிப்படுகிறார்கள். அல்லது மருந்துக்காக பெருமளவில் செலவிட்டு கடனாளியாகி நிற்கிறார்கள். சாதாரண நோய்க்காக, ஒவ்வொரு புற நோயாளியும் தனது மொத்த மருத்துவ செலவில் மூன்றில் இரண்டு பங்கு தொகையை மருந்து-மாத்திரைகளுக்காகச் செலவிடுவதாக, இந்திய அரசின் 55-வது சுற்று தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அறிக்கையே குறிப்பிடுகிறது. 1995-இல் இரத்த சோகைக்கான மருந்தின் விலை 177 சதவீதம் உயர்ந்தது; காசநோய் தடுப்புக்கான மருந்தின் விலை 90 சதவீதம் உயர்ந்தது. இம்மருந்துகளும் இன்னும் பலவும் மேலும் விலை உயர்ந்துள்ளனவே தவிர, இன்றுவரை குறையவில்லை. உதாரணமாக சிட்ரிஜைன், நிமிசுலைடு, ஒமெப்ராஜோல் ஆகிய பரவலாக விற்கப்படும் மருந்துகளின் மூலம் 1000 சதவீதம் அளவுக்கு இலாபமீட்டி மருந்துக் கம்பெனிகள் கொள்ளையடித்துள்ளதாக இரசாயனத் துறை அமைச்சகமே கூறுகிறது.

இந்தப் பகற்கொள்ளை போதாதென்று, "பொதுவான" மருந்துகளை விலைக் கட்டுப்பாடு பட்டியலிலிருந்து விலக்கி விடுமாறு பன்னாட்டு ஏகபோக மருந்துக் கம்பெனிகள் இந்திய அரசை நிர்ப்பந்தித்து வருகின்றன. கடந்த மார்ச் மாதத்தில் அமெரிக்க அதிபர் புஷ் இந்தியாவுக்கு வந்தபோது, பிரதமரிடம் இதுபற்றி வலியுறுத்தியுள்ளார். இதைத் தொடர்ந்து மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தை (DCA)த் திருத்தியமைக்க அரசு பரிசீலித்து வருகிறது. இச்சட்டப்படி, ஒரு புதிய மருந்து சந்தைக்கு வருமுன் அதன் பாதுகாப்புத் தன்மை, நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல், தரம் ஆகியவற்றுக்காக இந்திய மருந்துக் கட்டுப்பாடு ஆணையரிடம் (DCG-I) அனுமதியும் சான்றிதழும் பெறவேண்டும். இந்த விதியை நீக்கி விடுமாறு பன்னாட்டு ஏகபோக மருந்துக் கம்பெனிகள் நிர்பந்திக்கின்றன.

மேலும், "பொதுவான" மருந்துகள் என்ற வகையின் கீழ் ஒரு புதிய மருந்து தயாரித்தால், அப்பொது மருந்தை உருவாக்கிய நிறுவனத்துக்கு புதிய மருந்தைத் தயாரித்துள்ள நிறுவனம் கப்பம் கட்ட வேண்டும் என்று புதிய விதியை உருவாக்குமாறு வலியுறுத்தி வருகின்றன. உதாரணமாக, "பாரசிட்டமால்" என்ற காய்ச்சலுக்கான பொதுவான மாத்திரையை, ஒரு உள்நாட்டு மருந்து நிறுவனம் புதிய கல



படிப்பகம்

www.padippakam.com



**மருந்துப் பொருட்கள் சட்டம் திருத்தப்பட்டால், மருந்து விலைகள் தாறுமாறாக உயரும்; பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கமும் கொள்ளையும் கேள்விமுறையின்றித் தொடரும்; சாமானிய மக்கள் சாதாரண தலைவலி - காய்ச்சலுக்கான ''பொதுவான'' மருந்துகளைக் கூட வாங்க முடியாதபடி அவற்றின் விலைகள் எட்டாத உயரத்தில் இருக்கும்.**

வையுடன் புதிய பெயரில் விற்க முனைந்தால், அந்த நிறுவனம், பொது மருந்தைக் கண்டுபிடித்த ஏகாதிபத்திய நிறுவனத்துக்குக் கப்பம் கட்டவேண்டும் என்கின்றன. இதற்கேற்ப மருந்துப் பொருட்கள் சட்டம் திருத்தப்பட்டால், மருந்து விலைகள் தாறுமாறாக உயரும்; பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கமும் கொள்ளையும் கேள்விமுறையின்றித் தொடரும்; உள்நாட்டு மருந்துக் கம்பெனிகள் மலிவான விலையில் ''பொதுவான'' மருந்துகளை உற்பத்தி செய்ய முடியாமல் முடங்கிப் போகும். சாமானிய மக்கள் சாதாரண தலைவலி - காய்ச்சலுக்கான ''பொதுவான'' மருந்துகளைக் கூட வாங்க முடியாதபடி அவற்றின் விலைகள் எட்டாத உயரத்தில் இருக்கும்.

ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாதிக்கக் கொள்ளைக்கு ஏற்ப இந்திய ஆட்சியாளர்கள் ஏற்கெனவே கம்பெனிகள் சட்டம், ஏகபோக தடுப்புச் சட்டம், அந்நியச் செலாவணி முறைப்படுத்தல் சட்டம், விதைச் சட்டம் எனப் பல்வேறு சட்டங்களை மாற்றியமைத்து விட்டனர். எஞ்சியிருக்கும் மருந்துப் பொருட்கள் கட்டுப்பாடு சட்டத்தையும் மாற்றியமைக்க இப்போது முயற்சித்து வருகின்றனர். ஏற்கெனவே மருந்துகளின் விலையேற்றக் கொள்ளையால் தத்தளித்துக் கொண்டிருக்கும் கோடானுகோடி உழைக்கும் மக்கள் மீது, மிகக் கொடிய மறுகாலனியத் தாக்குதலை ஏவி விடுவதற்கான ஏற்பாடுகளை வேகவேகமாக காங்கிரசு ஆட்சியாளர்கள் செய்து வருகின்றனர். இந்நிலையில், பன்னாட்டு ஏகபோக மருந்துக் கொள்ளையர்களின் ராஜ்ஜியத்தை நாம் அனுமதிப்பதா? அல்லது இக்கொள்ளைக் கூட்டத்துக்கு கதவை அகலத் திறந்துவிடும் மறுகாலனியாக்கத்திற்கு எதிராகப் போராடுவதா? நாட்டுப்பற்றும் சமூக உணர்வும் கொண்ட ஒவ்வொரு வரையும் உலுக்கும் கேள்விகளே இவை.

• குமார்


# ''நாட்டைச் சூறையாட வரும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை விரட்டியடிப்போம்!''

## — புரட்சிகர அமைப்புகளின் அரங்கக் கூட்டங்கள்

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் வேகமாக உருவாக்கப்பட்டு வருகின்றன. பல்லாயிரக்கணக்கான விளைநிலங்களை ஆக்கிரமித்து, விவசாயிகளை விவசாயத்திலிருந்தே விரட்டியடித்துவிட்டு, இந்தியர்களோ இந்தியச் சட்டங்களோ நுழைய முடியாதபடி தனி சமஸ்தானங்களாக உருவாக்கப்படும் இம்மண்டலங்களில், வரைமுறையின்றிச் சூறையாட எல்லையற்ற அதிகாரத்தை உள்நாட்டு - வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு இந்திய அடிமை ஆட்சியாளர்கள் அள்ளிக் கொடுத்துள்ளனர்.

இது வெறுமனே விவசாய நிலங்கள் பறிபோகின்ற விவகாரமல்ல; நாடே அன்னிய ஏகாதிபத்தியங்களிடம் பறிபோகின்ற காலனியாதிக்கத் தாக்குதல் என்பதை விளக்கியும், சீர்திருத்தங்களோடு இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவக் கோரி எதிர்ப்பு நாடகமாடும் பல வண்ண ஓட்டுக் கட்சிகளை அம்பலப்படுத்தியும், இரண்டாவது சுதந்திரப் போருக்காக அனைத்து உழைக்கும் மக்களும் அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கியும் தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், தாங்கள் செயல்படும் பகுதிகளில் கடந்த இரு மாதங்களாக வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக கடந்த டிசம்பர் மாதத்தில் கோவை, திருச்சி, தருமபுரி, இராணிப்பேட்டை, சென்னை ஆகிய நகரங்களில், ''நாட்டைச் சூறையாட வரும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை விரட்டியடிப்போம்!'' என்ற தலைப்பில் அரங்கக் கூட்டங்களை நடத்தின. சென்னையில் நடந்த கூட்டத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் திரு. த.வெள்ளையன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதர நகரங்களில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள், வணிகர் சங்கப் பிரமுகர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினர். காலனியாதிக்கத்துக்கு எதிராகத் தென்னகத்தில் கிளர்ந்தெழுந்த முதல் சுதந்திரப் போரின் வீரமரபை உயர்த்திப் பிடித்து, இன்றைய மறுகாலனியாக்கச் சூழலில் இரண்டாவது சுதந்திரப் போருக்கு உழைக்கும் மக்களை அறைகூவுவதாக இக்கூட்டங்கள் அமைந்தன.



சென்னையில்...

- பு.ஜ. செய்தியாளர்கள்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

காரணங்களினால் சிங்களப் பேரின அரசியல் சக்திகள் அனைத்தையும் ஒருசேர எதிர்ப்பது என்ற நிலையிலிருந்து இலங்கை நாடாளுமன்ற மற்றும் அதிபர் தேர்தல்களில் புலிகள் எடுத்த நிலைப்பாடு சந்திரிகா-ராஜபக்சே கும்பலின் வெற்றிக்கு காரணமாக அமைந்தது.

ரணில் மற்றும் புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு யுத்த நிறுத்தம் மற்றும் சமாதான முன்னெடுப்புகளை முறியடிக்கும் முயற்சியினூடாக சிங்கள பேரினவாதம் சந்திரிகா குமாரதுங்கா மற்றும் மகிந்த ராஜபக்சே தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி ஒரு வலுவான சிங்களப் பேரினவாத சக்தியாக உருவெடுத்திருக்கிறது. அதன் சித்தாந்த தலைமையாக ஜே.வி.பி. மற்றும் ஜாதிகா ஹெல உருமய ஆகிய சிங்களப் பேரினவெறி அமைந்திருக்கிறது. இறுதியில் ரணிலும் கூட இந்த கூட்டணியுடன் சமரசம் செய்து கொண்டு ஐக்கியப்பட்டு நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான தீர்வு என்ற பழைய முயற்சியே மேற்கொள்ளப்பட்டாலும் தற்போதைய போரை தெளிவான, திட்டமிட்ட யுத்த தந்திர அடிப்படையிலேயே சிங்களப் பேரினவாதம் வழிநடத்துகிறது. இதன்படி போரை வழிநடத்துவதற்கான அதிகாரம் முழுக்கவும் இராணுவத் தளபதிகளிடமும், இராணுவ அமைச்சகத்திடமும் கையளிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கில் கருணாவின் கைக்கூலிப்படையைக் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தாக்கி பலவீனப்படுத்துவது; கடந்த நான்காண்டுகளில் புதிதாகத் திரட்டப்பட்டிருக்கும் படை பலத்தையும், ஆயுத பலத்தையும் வைத்துக் கொண்டு புலிகளின் வலுவான இலக்குகளைத் தாக்கி பலவீனப்படுத்துவது; ஈழத் தமிழ் மக்கள் மீது விமானக் குண்டுவீச்சுகளை நடத்தி படுகொலைகள் செய்வது; பொருளாதார முற்றுகையிட்டு ஈழ மக்களை பட்டினிச் சாவில் தள்ளுவது; இதன் மூலம் புலிகளின் மக்கள் செல்வாக்கை வடியச் செய்வது; இலங்கை அரசாங்கம் அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற அந்நிய நாடுகளுடன் இராணுவக் கூட்டை ஏற்படுத்திக் கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு உலகப் போரோடு புலிகளுக்கு எதிரானப் போரையும் இணைப்பது என்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் தற்போதைய யுத்தத் தந்திரமாக இருக்கிறது.

இதன் ஓர் அங்கமாகவே சம்பூரிலும் பிற இடங்களிலும் குண்டு வீச்சை நடத்தியது. அடுத்து, புலிகளின் கெப்பித்தி கொல்லாவ கிளேமோர் தாக்குதலை சாக்காக வைத்து இராணுவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வான்வழித் தாக்குதலை தீவிரப்படுத்தியது. அதே போல மாவிலாறு அணை நெருக்கடியை சாக்கு வைத்து தொண்டு நிறுவனங்கள் உட்பட சிவிலியன்கள் மீதும் குண்டு வீசித் தாக்கியது. செஞ்சோலை சிறுவர்கள் முகாம் மற்றும் வாகரை அகதிகள் மருத்துவமனை மீதும் குண்டுவீசி படுகொலைகள் புரிந்தது. ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். 3 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் சொந்தத் தாயகத்திலேயே அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர்.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளது மனித உரிமை அமைப்புகளின் கடும் கண்டனத்துக்குள்ளான போதும், இலங்கை இராணுவம் வெற்றிக் குதூகலத்தில் வடக்கிலும், விடுதலைப் புலிகளைத் தாக்கி பலவீனப்படுத்துவதற்காக யானையிறவைக் கைப்பற்றும் சாகச முயற்சியில் கடந்த அக்டோபரிலும் இறங்கியது. ஆனால், தாக்குதல் தொடுத்த ஒரு சில மணிநேரங்களிலேயே அது பேரிழப்பை சந்தித்தது. 130 போர் வீரர்களைப் பலி கொடுத்ததோடு நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்று பெரும் பின்னடைவைச் சந்தித்தது. முகாமலை பெருந்தோல்வி எனப்படும் இதையடுத்து ஹப்அரானா எனுமிடத்தில் வெடிமருந்து ஏற்றிய லாரியைக் கொண்டு புலிகளின் தற்கொலைப் படை நடத்தியத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கைக் கடற்படையினர் கொல்லப்பட்டது, மேலும் ஒரு பின்னடைவாக அமைந்தது. சிங்களப் பேரினவாதிகள் கனவு கண்டதைப் போல இராணுவ ரீதியிலான வெற்றி என்பது அவ்வளவு எளிதானதல்ல என்பதையே களநிலைமைகள் தெளிவுபடுத்துகின்றன.

விடுதலைப் புலிகளின் யுத்தத் தந்திரமும் கூட ஒரு மாற்றத்துக்குள்ளாகி இருக்கிறது. இராணுவ ரீதியிலான வெற்றியின் மூலமாகவே ஈழ விடுதலையை சாதித்துவிட முடியும் என்று இதுவரை நம்பி வந்த புலிகள், சிங்கள பேரினவாதத்திற்கெதிராக இராணுவ ரீதியிலான மேலாண்மை பெற்று விட்டாலே "சர்வதேச சமூக நெருக்குதல் காரணமாக, கிழக்கு திமோரில் நடந்ததைப் போன்ற சுயநிர்ணய உரிமைக்கான ஒரு வாக்கெடுப்புக்கான வாய்ப்பு தோன்றும்" என்று இப்போது கருதுகிறார்கள். இதற்காக ஏகாதிபத்தியங்கள் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் ஆதரவைப் பெறும் வகையில் அரசியல் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இந்த ரீதியிலேயே, ஈழப் பிரச்சினையில் இந்தியா தலையீடு செய்ய வேண்டுமென்று இங்குள்ள தமிழினவாதக் குழுக்களும் புலி ஆதரவு அமைப்புகளும் திரும்பத் திரும்ப கோருகின்றன. ஆனால், ராஜீவ் காலத்தில் நடந்ததைப் போல இந்தியத் தலையீடு என்பது ஈழத் தமிழர்களுக்கெதிரானதாகவே இருக்கும் என்பதை அவர்கள் வசதியாக மறந்து விடுகிறார்கள். ஏற்கெனவே மன்மோகன் சிங் - சோனியா கும்பல் இராணுவ ரீதியில் இலங்கை அரசுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் கொடுத்து வருகிறது. இதுவும் கூட மன்மோகன் சிங் - சோனியாவுக்கு தெரியாமல் அதிகாரிகளாகவே மேற்கொள்ளும் நடவடிக்கை தான் என்று அவர்கள் பூசி மெழுகுகிறார்கள்.

சிங்களப் பேரினவாதிகள் கருதுவதைப் போல இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான தீர்வு, விடுதலைப் புலிகள் கருதுவதைப் போல சர்வதேச சமூக ஆதரவு ஆகிய இரண்டுமே எதார்த்தத்துக்குப் புறம்பான நிலை என்பதையே நடப்பு அரசியல் - இராணுவ நிலைமைகள் தெளிவாக்குகின்றன. •

முகமலை தாக்குதலின்பொழுது கொல்லப்பட்ட சிங்கள சிப்பாய்கள்.





படிப்பகம்

www.padippakam.com



### சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

ஒரு பெண் எதுவும் செய்ய வேண்டியதில்லை. அவள் ஒரு பெண்ணாக இருக்கிறாள் என்பதற்காகவே அவளுக்கு எதிராக வன்முறை-கிரிமினல் குற்றம் ஏவிவிடப்படுகிறது. பெண் -அவள் கருவிலிருக்கும்போதே படுகொலை செய்யப்படுகிறாள். பெண் - ஒரு உயிரற்ற பொருளைப் போல விற்கப்படுகிறாள். பெண் - ஒரு ஆட்டின், ஒரு மாட்டின் சதையை வாங்குவதைப் போல விலைக்கு வாங்கப்படுகிறாள். பெண் - அவள் நிர்வாணப்படுத்தப்பட்டு கலையின் பெயரால் வியாபாரம் செய்யப்படுகிறாள். சாதி, மத, இனச் சண்டையா முதல் பலி, பெரும்பலி பெண்தான்!

''நாடு முழுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறை-கிரிமினல் குற்றங்கள் மேலும் மேலும் பெருகி வருகின்றன. பல வழக்குகள் விசாரணைக்குட்படுத்தப்படுவதுமில்லை. வெளியே சொல்லப்படுவதுமில்லை'' என்கிறார் பெண்களுக்கான தேசிய ஆணையத்தின் உறுப்பினரான நிர்மலா வெங்கடேசு.

இங்கே ''பெண்களுக்கு எதிரான வன்முறை-கிரிமினல் குற்றங்கள்'' என்று குறிப்பிடப்படுவன, வீட்டுக்குள்ளேயும், பணியிடங்கள் மற்றும் பொது இடங்கள் உட்பட வெளியேயும் மற்றவர் கண்ணுக்குப் புலப்படக் கூடியவை தாம். இவை தவிர வெளிப்படையாக-கண்ணுக்குப் புலப்படாத கொடுமைகள் ஏராளமாகப் பணியிடங்களிலும், குடும்பத்திலும் பெண்களுக்கு எதிராக அன்றாடம் இழைக்கப்படுகின்றன.



குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் அமலுக்கு வந்த மறுநாளே, அச்சட்டத்தின் கீழ் தனது கணவன் ஜோசப் மீது புகார் கொடுத்த பெனடிக் மேரி. (நன்றி: இந்தியாடுடே).

தமிழகத்தில் மட்டும் கடந்த 2005-ஆம் ஆண்டில் 571 பாலியல் வன்முறைகள், 783 கடத்தல்கள், 215 வரதட்சிணைக் கொலைகள், 1650 குடும்ப வன்முறைக் குற்றங்கள் நடந்திருப்பதாக தேசியக் குற்றப்பிரிவு ஆணையம் தெரிவிக்கிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்வதில் தமிழகம் 12-வது இடம் வகிக்கிறது. நாடு முழுவதும் எடுத்துக் கொண்டால் பெண்களுக்கு எதிரான கிரிமினல் குற்றங்கள் என்று ஆண்டுதோறும் 1.5 இலட்சம் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

அவற்றில் பெரும்பாலானவற்றில் பெண்களுக்கு நீதி கிடைப்பதில்லை. சமூகத்தில் மட்டுமல்ல, போலீசு - நீதித்துறையிலும் - சட்டத்துறையிலும் ஆணாதிக்கம் நிலவுவதுதான் இதற்குக் காரணம். பிரபலமான பல பாலியல் வன்முறை வழக்குகளில், குற்றவாளிகளை விடுதலை செய்து 'நீதிபதிகள்' தெரிவித்த கருத்துக்கள் வெட்கக்கேடான ஆணாதிக்க வெறியை வெளிப்படுத்துகின்றன. ''பாதிக்கப்பட்ட பெண்களின் நடை-உடைதான் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் உணர்வைத் தூண்டிவிட்டன'' என்றும் ''மேல்சாதிக்காரர், தாழ்ந்த சாதிப் பெண்ணைத் தீண்டி பாலியல் உறவு கொண்டிருக்க மாட்டார்கள்'' என்றும் அருவெறுக்கத்தக்க முறையில் தீர்ப்புக் கூறப்பட்ட வழக்குகள் உள்ளன. இப்படிப்பட்ட வக்கிரமான சிந்தனை கொண்டவர்கள் நீதிபதிகளாக உள்ள நாட்டில் பெண்ணுரிமை - நீதி என்பது எல்லாம் கானல் நீரே!

நாட்டின் தலைநகர் புதுதில்லியில், தன் ஆசைக்கு இணங்க மறுத்த சட்டக் கல்லூரி மாணவி பிரியதர்சினி மட்டூவை அதே கல்லூரியின் மூத்த மாணவனும், மாநில இணை போலீசு ஆணையரின் மகனுமான சந்தோஷ் குமார் சிங் என்பவன், அவளது வீட்டுக்குள் புகுந்து பாலியல் வன்முறை செய்து கோரமான முறையில் கொன்றான். அதேநகரில், விடுதி விருந்து முடிந்து, சாராய விற்பனை முடிந்த பிறகு, சாராயம் பரிமாற மறுத்த ''மாடல்'' பெண் ஜெசிகாலால் என்பவரை சுட்டுக் கொன்றான், அரியானா அமைச்சரின் தறுதலைப் பிள்ளை மனுசாமா. செய்தி ஊடகத்தில் பிரபலமாக அடிபட்ட இந்த இரு வழக்குகளிலுமே, சாட்சியங்களைப் போலீசும், சி.பி.ஐ.யும் மூடி மறைத்ததை அறிந்திருந்தும் தில்லி அமர்வு நீதிமன்றம் குற்றவாளிகளை விடுதலை செய்தது. செய்தி ஊடகம் மற்றும் அறிவுஜீவிகள் அலறிக் கூச்சல் போட்ட பிறகு, தில்லி உச்சநீதி மன்றத்தால் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். நீதித்துறையின் மீதே நடுத்தர



படிப்பகம்

வர்க்கம் நம்பிக்கை இழந்துவிடும் என்ற பீதியில்தான் இத்தகைய தீர்ப்புகள் வந்தன. நாடே அறிந்த பிரபலமான வழக்குகளுக்கே இதுதான் கதி என்கிறபோது, சாதாரண அப்பலைப் பெண்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்?

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், வரதட்சணைக் கொடுமைத் தடுப்புச் சட்டம், பெண்கள் வாழ்வுரிமைப் பாதுகாப்புச் சட்டங்கள், பெண்கள் பணிப் பாதுகாப்புச் சட்டங்கள், இந்தியத் தண்டனை சட்டம் - 498 அ-வின் கீழ் பல பிரிவுகள் என்று பெண்களுக்காகவே பல சட்டங்கள் ஏற்கெனவே இருந்தும், இந்த நாட்டில் பெண்களின் நிலைமை இன்னமும் அதல பாதாளத்தில்தான் கிடக்கிறது.

பெண்கள் மீதான கொடுமைகளைத் தடுப்பதற்கானவை என்று கொண்டு வரப்பட்ட சட்டங்களே பெண்களை மேலும் வதைப்பனவாக உள்ளன. அதனாலேயே தங்களுக்கு எதிராகக் கொடுமைகள் இழைக்கப்படும்போதெல்லாம், சட்டத்தின் துணை கொண்டு நீதி - நியாயத்தை பெற்றுவிட முடியும் என்று பெரும்பாலான பெண்கள் நம்புவதில்லை. பல குற்றங்களையும் வெளியே சொல்லாது அவர்கள் தாங்களே சகித்துக் கொண்டு வாழ்கிறார்கள். அதற்கு முன்பாக குற்றங்களுக்கு இலக்கான பெண்களையே இழிவாகக் கருதும் சமூக நோக்கு அவர்களை ஒடுக்கி வைத்திருக்கிறது.

அதையும் மீறி, துணிவு கொண்டு சட்டம், போலீசு, நீதித்துறையை அணுகினால், விட்டால் போதும் என்று தாங்களே வழக்கிலிருந்து விலகிக் கொள்ளும் வகையில், மேலும் பெண்கள் இழிவுபடுத்தப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, பாலியல் வன்முறைக்குப் பலியான பெண்கள் அருவெறுக்கத்தக்க வக்கிரமான பல சோதனைகளையும் கேள்விகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. விபச்சாரத்திற்குத் தள்ளப்படும் பெண்களைத் தண்டிக்கும் வகையில்தான் விபச்சாரத் தடுப்புச் சட்டம் உள்ளது. பெண்களோடு விபச்சாரத்தில் ஈடுபடும், ஈடுபடவைக்கும் ஆண்கள் தண்டிக்கப்படுவதில்லை. பாலியல் வன்முறைக்குப் பலியாகும் பெண்கள் மீது விபச்சாரப் பட்டம் கட்டி குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வது; தப்பித்துக் கொள்ள எத்தணிப்பது பெரும்பாலான வழக்குகளில் வழக்கமாக உள்ளது. உச்சநீதி மன்றத்தின் மூத்த பிரபல வழக்கறிஞரும், முன்னாள் மத்திய சட்ட அமைச்சருமான ராம்ஜெத் மலானி, ஜெசிகா லால் கொலை வழக்கில் இந்தக் கோணத்தில் வாதாடித்தான் குற்றவாளிக்கு விடுதலை வாங்கித்தர எத்தணித்தார்.



**பாண்டிச்சேரி காங். அரசில் அமைச்சராக இருந்த அங்காளன் மீது குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் புகார் கொடுத்துள்ள அவரது மனைவி கவிப்பிரியா.** *(நன்றி: இந்தியா டுடே)*

பெண்கள் மீதான கொடுமைகளைத் தடுப்பதற்கானவை என்று சில சட்டங்கள் இருப்பதைப் போலவே, அவற்றின் நோக்கங்களை முறியடிக்கும் வகையில் வேறு பிற சட்டங்கள் உள்ளன. முக்கியமாக, இந்த நாட்டின் மண உறவு சட்டங்கள் எல்லாமே, இந்து திருமணச் சட்டம், இசுலாமியத் திருமணச் சட்டம் (ஷரியத்), மற்றும் கிறித்துவத் திருமணச் சட்டம் என்று மத ரீதியிலானவையாகவே உள்ளன. மண உறவுகளில் பெண்களை அடிமைப்படுத்தி அநீதி அளிக்கும் வகையிலே இந்தச் சட்டங்கள் உள்ளன. மதரீதியிலான மணஉறவுச் சட்டங்களை இரத்து செய்வதற்குப் பதில், அவற்றோடு பொருந்தாத வகையில் சில கண்துடைப்பு, ''உரிமை - பாதுகாப்பு''ச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

1960-களில் கொண்டு வரப்பட்ட வரதட்சணைத் தடுப்புச் சட்டமும், 1980-களில் கொண்டு வரப்பட்ட வரதட்சணைக் கொடுமைத் தடுப்புச் சட்டமும், 2005-இல் கொண்டு வரப்பட்ட இந்து பரம்பரை சொத்துரிமைச் சட்டமும் இத்தகையவைதாம். இந்து திருமணச் சட்டமும், இசுலாமிய (ஷரியத்) திருமணச் சட்டமும் இப்புதிய சட்டங்களைச் செயல்படவிடாமல் தடுத்து விடுகின்றன. மண வாழ்க்கை உரிமை கோரும் சட்டப் பிரிவின் கீழ் ஆந்திராவிலிருந்து ஒரு ''மன நோயாளி'' பிரபல நடிகைகள் சிறீதேவியையும் ஜெயப்பிரதாவையும் வழக்குப் போட்டுத் தொல்லைப்படுத்திய கேலிக் கூத்தையும் பார்த்திருக்கிறோம். இந்த வழக்குகளில் இருந்து பணபலம், அரசியல் செல்வாக்கை வைத்து அந்த நடிகைகள் தப்பித்துக் கொள்ள முடிந்தது. ஆனால், சாதாரண அபலைப் பெண்களால் முடியுமா? அதுவும் குடும்ப வழக்கு மன்றங்களும், அனைத்து மகளிர் போலீசு நிலையங்களும் கட்டைப் பஞ்சாயத்துக்களாக நடத்தப்படும் போது, மண வாழ்க்கை உரிமை கோரும் சட்டப்பிரிவுகள் பெண்களை வீழ்த்துவதற்கான ஆயுதங்களாகவே உள்ளன.

பெண்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் ஏற்கெனவே உள்ள சட்டங்கள் போதாது என்று கருதும் தேசிய மகளிர் ஆணையமும், வேறு பல பெண்கள் அமைப்புகளும் மேலும் சில சட்டங்களும் ஏற்பாடுகளும் செய்ய வேண்டும் என்று கோருகின்றன.

''தற்போது ஆணையத்தின் முன்பு, 13,000 வழக்குகள் உள்ளன; அவற்றில் பெரும்பாலானவை குடும்ப வன்முறைகள் சம்பந்தப்பட்டவை. இவை தவிர, வேலையிடங்களில் பாலியல் கொடுமைகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. மின்னணுவியல், தகவல் தொழில் நுட்பம், உணவு பதனிடுதல், விவசாயம் மற்றும் துணி ஆலைத் தொழில்கள் போன்றவைகளில் தகுந்த தொழிலாளர் சட்டங்களும், சமூகப் பாதுகாப்புகளும் செய்யப்பட வேண்டும். கால் சென்டர் ஊழியர்களின் பாதுகாப்புக் குறித்து அரசாங்கமும் கூட்டுப் பங்குக் கழகங்களும் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்கிறார், நிர்மலா வெங்கடேசு.

நீண்ட நாள் இழுத்தடிப்பிற்குப் பிறகு கடந்த அக்டோபர் 25-ஆம் நாளிலிருந்து குடும்ப வன்முறையிலிருந்து பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டம் என்று புதிதாக ஒரு சட்டம் அமலுக்கு வந்திருக்கிறது. இது இதுவரை இல்லாத மாபெரும் ''புரட்சிச் சட்டம்'' என்று போலி கம்யூனிஸ்டுகள் முதல் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்

வரை போலி முற்போக்குகள் குதூகலிக்கின்றன. அதேவேளையில் பணியிடங்களில் பாலியல் கொடுமைகள் - தொல்லைகளைத் தடுப்பதற்கான மேலும் ஒரு சட்டம் கொண்டு வரும்படி மேற்படி அமைப்புகள் கோருகின்றன.

''மண உறவுகளிலும், குடும்பங்களிலும் உள்ளுறையும் அந்தரங்க விவகாரங்களில் தலையீடு செய்யும் வகையில் இதுவரை எந்தச் சட்டமும் வரவில்லை. இதுவரையிலான சட்டங்கள் எல்லாம் வீட்டுக் கதவுவரை போய் நின்றுவிட்டன. இப்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்டம் வீட்டுக்குள்ளேயே புகுந்து, பெண்களுக்கு எதிரான இரகசியமான, உடல் ரீதியிலான கொடுமைகளை மட்டுமல்ல; மனரீதியிலான துன்புறுத்தல்களையும் குற்றமாகக் கருதித் தண்டிக்கிறது'' என்று போலி கம்யூனிஸ்டுகளும் போலி முற்போக்குகளும் வரவேற்கின்றனர்.

''இந்திய அரசு புதிதாகக் கொண்டு வந்துள்ள பெண்கள் மீதான குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் முறைப்படி மணம் செய்து கொண்ட மனைவியை மட்டுமல்லாது, திருமணம் செய்து கொள்ளாது இணைந்து வாழும் பெண்ணுக்கும், விதவைகள், சகோதரிகள், தாய்மார்களுக்கும் கூட ஆண்களின் கொடுமைகளில் இருந்து பாதுகாப்பு வழங்குவதாகக் கூறப்படுகிறது. மனைவியை அடித்துத் துன்புறுத்துவது, வரதட்சணை கேட்டுக் கொடுமைப்படுத்துவது, பாலியல் உறவுக்குக் கட்டாயப்படுத்துவது, ஆபாசப் படம் பார்க்கக் கட்டாயப்படுத்துவது ஆகியவை குற்றமாகக் கருதப்படுகிறது. மனைவியோ, இணைந்து வாழும் பெண்ணோ வேலை செய்வதற்குத் தடை ஏற்படுத்துவது குற்றமாகக் கருதப்படும். குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்படுபவர், பாதிக்கப்பட்ட பெண் பணிபுரியும் இடம், வசிக்குமிடம், அடிக்கடி நடமாடும் இடங்களுக்குச் செல்வது கூடத் தடை செய்யப்படும். பாதிக்கப்பட்ட பெண்களின் வசிப்பிடம்-பொருளாதார உதவிக்கும் சட்டம் வழிவகுக்கும்'' என்கிறார்கள்.

இதுவரை பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக இந்தியக் கிரிமினல் சட்டம் 498-அ பிரிவின் கீழ் போலீசிடம் மட்டுமே புகார் கொடுத்து, கிரிமினல் குற்றத் தடுப்பு - தண்டனை நடவடிக்கை எடுக்க முடியும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் மூன்றாண்டுகள் சிறையும் அபராதத் தொகையும் அதிகபட்சமாக விதிக்க முடியும். ஆனால் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் ஒரு சிவில் சட்டம்தான். இதன்படி பாதிக்கப்படும் பெண் கீழ்நிலை நடுவர் நீதிமன்றத்திலோ, போலீசிடமோ மட்டுமின்றி இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் அமலாக்க அதிகாரிகளிடமும், அங்கீகரிக்கப்படும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் புகார் கொடுத்து நீதியும், நிவாரணமும் பெறமுடியும்.

498-அ பிரிவின் கீழ் கணவனுக்கு எதிராகக் கிரிமினல் வழக்குத் தொடுத்தல், மீண்டும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பின்றிப் போய்விடும் என்று அஞ்சுவதால், பல பெண்கள் புகார் கொடுக்க இவ்வளவு காலமும் கொடுமையை-குடும்ப வன்முறையைச் சகித்துக் கொண்டிருந்தனர். பெண்களுக்கு எதிரான வன்முறையையும் தடுத்திட வேண்டும்; அதேசமயம் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பும் இருக்கவேண்டும்; அதற்கு இந்த குடும்ப வன்முறைத் தடுப்பு சிவில் சட்டம் உதவும் என்று தொண்டு நிறுவனங்களும், பெண்களுக்கான வழக்கறிஞர் அமைப்புகளும் வாதிட்டு வந்தனர். இப்போது அது கிட்டிவிட்டதாக வரவேற்கின்றனர்.

ஆணாதிக்க குடும்ப - சமூக அமைப்புமுறையும், சட்ட - நீதி அமலாக்க நிறுவனங்களும் நீடிக்கும்போது இப்படிப்பட்ட சீர்திருத்தச் சட்டங்கள் குறிப்பிடத்தக்க மாற்றம் எதையும் கொண்டு வந்துவிட முடியாது. ஆனால், நமது நாட்டின் பாரம்பரியத்தையும் குடும்ப உறவுகளையும் சிதைத்து விடும் என்று இந்தியக் குடும்ப ஃபவுண்டேசன் மற்றும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பாசிச அமைப்புகளும் வாதிடுகின்றனர். பொது சிவில் சட்டம் என்ற பெயரில் இந்துத்துவ ஆணாதிக்க சிவில் சட்டத்தைத் திணிப்பதற்காக எப்போதும் முயன்று வரும் அக்கும்பல், தற்போதுள்ள மதரீதியிலான திருமணச் சட்டத்தைப் பாதிக்கும் சிறு சிறு சீர்திருத்தங்களையும், கிறித்துவமயமாக்கும் முயற்சி என்று எதிர்க்கின்றனர். அருண் ஜெட்லி, சோ, குருமூர்த்தி போன்ற இந்து சனாதன ஆணாதிக்கவாதிகள், இக்குடும்ப வன்முறைச் சட்டத்தைப் பெண்கள் ஆண்களுக்கு எதிராக கேடாகப் பயன்படுத்தி விடுவார்கள் என்று கூப்பாடு போடுகிறார்கள்.

''இம்மாதிரியான குற்றங்களுக்கான காரணம் மிகையான மக்கட்தொகை, வேலையின்மை, சட்டங்கள் அமலாக்கப்படுவது குறித்துப் போதிய அறிவின்மை மற்றும் விசாரணைகள் - நடவடிக்கைகள் மந்த கதியில் செய்யப்படுவது ஆகியவைதாம்'' என்று தேசிய மகளிர் ஆணையம் கூறுகிறது. இதுவே மேலோட்டமான, முதலாளிய நோக்கிலான கண்ணோட்டம்தான். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சி எதுவுமின்றி வெறுமனே புண்ணுக்குப் புணுகு தடவுவதுபோல குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தற்போதுள்ள ஆணாதிக்க இந்து, இசுலாமிய (ஷரியத்), கிறித்தவ மதவாத அடிப்படையிலான திருமண சட்டங்களை விட, ஐரோப்பிய முதலாளிய சிவில் சட்டம் ஓரளவு மேலானதுதான். ஆனால், அரசியல் புரட்சியைத் தொடர்ந்து வரும் சமூக, பண்பாட்டு, பொருளாதாரப் புரட்சி மாற்றங்களின்றி பெண்கள் விடுதலை பெறுவது. உரிமைகளும் சமத்துவமும் பெறுவது சாத்தியமே இல்லை.

(தொடரும்)

இப்போது விற்பனையில்...



இட ஒதுக்கீடு

— ஒரு மார்க்சிய-லெனினியப் பார்வை

புதிய ஜனநாயகம் வெளியீடு விலை: ரூ. 30/-

இட ஒதுக்கீடு தொடர்பாக புதிய ஜனநாயகம் இதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. இட ஒதுக்கீடு பற்றிய மார்க்சிய-லெனினிய நிலைப்பாட்டையும் நடைமுறைச் செயல்பாட்டையும் தொகுத்தளிக்கும் நூல்.

நூல் கிடைக்குமிடம்:

கீழைக்காற்று வெளியீட்டகம்,

10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை – 600 002.

✆: 044-28412367

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

மே.வங்க சி.ஐ.டி.யு. தலைவரான சியாமல் சக்ரவர்த்தி.

"இந்த அமைப்பை வைத்துக் கொண்டு வேலை நிறுத்தம், போராட்டமெல்லாம் செய்வீர்களா?" என்று கேட்டால், ஊழியர்களுக்கான அமைப்பு என்ற உடனேயே ஏன் வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்? என்று எதிர்க்கேள்வி கேட்டு பூசி மெழுகுகிறார், சக்ரவர்த்தி. அப்படியானால், இந்த மன்றத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறார்களாம்?

தகவல் தொழில்நுட்ப ஊழியர்களை ஏற்றிச் செல்லும் வாகன ஓட்டிகளை அமைப்பாக்கி, அவர்களுக்குப் பாதுகாப்பாக வாகனத்தை ஓட்டுவது குறித்துப் பயிற்சி தருவார்களாம். கணவன், மனைவி இருவருமே இத்துறையில் வேலை செய்தால், அவர்களின் குழந்தைகளைப் பராமரிக்கக் குழந்தைகள் காப்பகம் - பால்வாடி முதலானவற்றை நடத்தப் போகிறார்களாம். தங்கள் மன்றத்தில் சேரத் தயங்கும் பொறியாளர்களுக்கு இணையதளம் ஒன்றை உருவாக்கி, அதில் பெயர் குறிப்பிட விரும்பாதவர்களையும் ஆதரவாளர்களாக இணைத்துக் கொள்ளப் போகிறார்களாம். சில தொழில்நுட்ப நிறுவனங்கள் இத்தகைய மன்றத்தில் இணைவோரைப் பழிவாங்காமல் இருக்க, இது முன்னேற்பாடான நடவடிக்கையாம். இனி இந்த மன்றம், இன்னும் திருமணமாகாத ஊழியர்களின் ஜாதகங்களைத் திரட்டி, திருமண தகவல் மையம் நடத்த வேண்டியதுதான் பாக்கி.

தகவல் தொழில்நுட்ப ஊழியர்களுக்கான அமைப்பை உருவாக்கியுள்ள பெருமிதத்துடன் பேட்டி தந்துள்ள சியாமல் சக்ரவர்த்தி, இம்மன்றம் அன்னிய முதலீடுகளுக்கு எதிரானது அல்ல என்றும், அன்னியக் கம்பெனிகள் மே.வங்கத்தில் தொழில் தொடங்கி நடத்துவதற்கு எதிரான திசையில் செல்லாது என்றும் உறுதியளித்துள்ளார். ஏற்கெனவே சி.ஐ.டி.யு. சங்கம் இயங்கும் சணல் ஆலைகளிலும், ஜப்பானிய மிட்சுபிஷி நிறுவனத்திலும் போராட்டமோ, வேலை நிறுத்தமோ செய்யவே இல்லை என்று தமது சங்கத்தின் மகிமையை விளக்கி, பன்னாட்டு முதலாளிகளை தாஜா செய்கிறார்.

டி.வி.எஸ்., பொள்ளாச்சி மகாலிங்கம் முதலான தரகுப் பெருமுதலாளிகளின் நிறுவனங்களில், தொழிலாளர்கள் வர்க்க உணர்வோடு சங்கமாகத் திரளுவதற்கு முன்னரே, இம்முதலாளிகள் ஐ.என்.டி.யு.சி. போன்ற கைக்கூலி சங்கத்தைக் கட்டி, அதற்கு அவர்களே புரவலர்களாக இருப்பர். அச்சங்கங்கள் தீபாவளி பண்டு பிடிப்பது, கலை நிகழ்ச்சி நடத்துவது, ஆயுதபூசை கொண்டாடுவது என்பனவற்றையே தமது தலையாயக் கடமையாகக் கொண்டிருக்கும். மற்ற சங்கங்களைப் போலல்லாமல், நாங்கள் வித்தியாசமானவர்கள் என்று சவடால் அடிக்கும் சி.ஐ.டி.யு., தகவல் தொழில்நுட்பத் துறையில் ஐ.என்.டி.யு.சி. பாணியிலான ஒரு மனமகிழ் மன்றத்தைக் கட்டி, இதுவும் தொழிற்சங்கம்தான் என்று நம்பச் சொல்கிறது.

ஒருபுறம், தகவல் தொழில்நுட்பத் துறையில் தொழிற்சங்கம் கட்டி விட்டோம் என்று பெருமையுடன் சவடால் அடிக்கலாம்; மறுபுறம், இச்சங்கத்தில் சேருவோரிடம் சந்தா-நன்கொடை திரட்டி ஆதாயமடையலாம்; இப்படியொரு பிழைப்புவாத உத்தியோடு ஒரு மனமகிழ்மன்றத்தைக் கட்டி நாடகமாடுகிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள்.

● கவி

# வாசகர் கடிதம்

● முல்லைப் பெரியாறு பிரச்சினையில் சுயநிர்ணய உரிமையே அரசை உலுக்கும் சரியான ஆயுதம், சரியான தீர்வு என்ற தலையங்கம் விரிந்த அரசியல் பார்வையை அளித்தது. சாதிய வெறியாட்டத்தின் இன்னுமொரு கொடிய இரத்த சாட்சியமாக உள்ள கயர்லாஞ்சி தாழ்த்தப்பட்டோர் படுகொலை அதிர்ச்சியளிப்பதோடு, இந்த அவமானத்தைத் துடைத்தெறியப் போராட வேண்டும் என்ற உணர்வூட்டுகிறது. சாதிய-வர்க்க-தேசிய இன முரண்பாடுகளும் மோதல்களும் நிலவும் சமுதாயத்தில் யார் யாருக்கு மரண தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பதிலிருந்தும், புரட்சிகர அரசியல் நடவடிக்கையின் நியாயத்தை முதலாளித்துவ மனிதாபிமானம் எப்படி பின்னுக்குத் தள்ளும் என்பதையும் ஒப்பிட்டு விளக்கிய அப்சல் குரு பற்றிய கட்டுரை சிறப்பு.

**- இரா. மணிகண்டன், சூசுவாடி.**

● மைய-மாநில அரசுகளும், உச்சநீதி மன்றமும், ஓட்டுக் கட்சிகளும் காவிரி முதல் முல்லைப் பெரியாறு வரை துரோகமிழைத்து வருவதையும், பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் அவசியத்தையும் உணர்த்திய தலையங்கம் சிறப்பாக அமைந்துள்ளது. தனியார்மயமும் தாராளமயமும் நாட்டைச் சூறையாடுவதோடு, நாகரீகப் பொறுக்கிகளையும் உருவாக்கி எத்தகைய விபரீதங்களை ஏற்படுத்தி வருகிறது என்பதை அட்டைப்படக் கட்டுரை எடுப்பாக உணர்த்தியது. பூவுலகையே தமது இலாபவெறிக்காக நஞ்சாக்கி நாசமாக்கி விட்ட ஏகாதிபத்தியவாதிகளின் கொடுஞ்செயலை அறியும்போது அதிர்ச்சியும் ஆத்திரமும் பொங்குகிறது. வாசகர் வட்டக் கூட்டத்தின் இறுதியில், "காந்தியின் இந்துத்துவ கோரமுகம்" என்ற தலைப்பில் புதுக்கோட்டையைச் சேர்ந்த மருத்துவர் ஜெயராமன் அவர்கள் சிறப்புரையாற்றினார். "தேசப் பிதா" என்று சித்தரிக்கப்படும் காந்தி, எவ்வாறு பார்ப்பன-இந்துவெறிக்குப் பல்லக்குத் தூக்கினார் என்பதை விரிவான சான்றாதாரங்களுடன் விளக்கிக் காட்டிய அவரது உரை, வாசகர்களுக்குப் புதிய பார்வையை அளிப்பதாக அமைந்தது.

**- வாசகர் வட்டம், திருச்சி.**

● விறகு அடுப்பு பயன்படுத்துவதால் புகை பெருகி சுற்றுச்சூழல் நாசமாவதாக ஏகாதிபத்தியவாதிகள் பீதியூட்டி வரும் நிலையில், உண்மையில் சுற்றுச்சூழலை நாசமாக்குவது யார் என்பதை அம்பலப்படுத்திக் காட்டிய கட்டுரை, அதிர்ச்சியூட்டும் தகவல்களுடன் அருமையாக அமைந்துள்ளது.

**- ஜீவா, ஜெயங்கொண்டம்.**

● கயர்லாஞ்சி கொடூரத்தை தமிழக பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்துவிட்ட நிலையில், சாதிவெறி பயங்கரத்தை பு.ஜ. கண் முன்னே காட்டியுள்ளது. இச்சாதிவெறி பயங்கரவாதிகளுக்கு வாக்குரிமை, சொத்துரிமை, இட ஒதுக்கீடு சலுகை உள்ளிட்ட அனைத்தையும் பறிப்பதுதான் சரியான தீர்வாகும்.

**- முகிலன், திருச்சி.**

● கூட்டு மனசாட்சியைத் திருப்திப்படுத்த அப்சல்குருவுக்கு மரண தண்டனை விதித்துள்ள இந்திய நீதித்துறை காவிப் படையாக உள்ளதை விரிவாக விளக்கியும், போலி கம்யூனிஸ்டுகளின் பொருள் பொதிந்த மவுனத்தைத் திரைகிழித்தும், வர்க்கக் கண்ணோட்டமற்ற மனிதாபிமான பசப்பல்களை எள்ளி நகையாடியும் வெளியாகியுள்ள கட்டுரை டிசம்பர் இதழுக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

**- சம்புகன், சிவகங்கை.**

● கோக்கின் கைக்கூலி நடிகை ராதிகாவுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டம், புரட்சிகர அமைப்புகளின் போர்க்குணத்தை மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது. தாராளமயம் பெற்றெடுத்த நாகரீகப் பொறுக்கிகளால் சாமானிய மக்களுக்கு விளையும் பேரபாயத்தை வர்க்க அரசியல் கண்ணோட்டத்தோடு விளக்கிய அட்டைப்படக் கட்டுரை, எனது சிந்தனையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது.

**- முரளி, இராசபாளையம்.**

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER No: 42648/85

Regn. No: TN /CC(S)Dn/190/06-08
WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

www.padippakam.com

# பார்ப்பன இந்துக் கோயில்கள்: தீண்டாமை மையங்கள்!

ஒவ்வொரு 'இந்து'க் கோயிலுமே, சாதிப் பாகுபாடுகள் நிலவுவதைப் பறைசாற்றும் மையங்களாகத் தான் இருந்து வருகின்றன. ஒரிசா மாநிலம் - கேந்திரபுரா மாவட்டத்திலுள்ள கேரேதகடா கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் நடத்திய கோவில் நுழைவுப் போராட்டம், இந்த உண்மையை மீண்டும் எடுத்துக் காட்டியுள்ளது.

இந்தக் கிராமத்தில் உள்ள ஜகந்நாதர் ஆலயத்தினுள் தாழ்த்தப்பட்டோர் சென்று இறைவனை வழிபடுவதைத் தடை செய்யும் தீண்டாமைக் கொடுமை, கடந்த 300 ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கோயிலின் சுற்றுப்புறச் சுவரில் போடப்பட்டிருக்கும் ஒன்பது துளைகளின் வழியாகப் பார்த்துதான் இறைவனை வழிபட வேண்டிய கட்டாயத்தில் தாழ்த்தப்பட்டோர் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், ஓராண்டுக்கு முன்பு - நவ. 2005-இல் நான்கு தாழ்த்தப்பட்ட பெண்கள் இத்தீண்டாமையை மீறி கோவிலுக்குள் நுழைந்ததால், அப்பெண்கள் மேல்சாதி வெறியர்களால் அவமானப்படுத்தப்பட்டுத் துரத்தப்பட்டனர். இத்தாக்குதலையடுத்து, அம்பேத்கர் - லோகியா விசார் மன்ச் என்ற அமைப்பு ஜகந்நாதர் கோயிலில் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமைக்கு எதிராக ஒரிசா உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து, ஆலய நுழைவுக்கு ஆதரவாகத் தீர்ப்புப் பெற்றது.

இத்தீர்ப்பு வழக்கம் போலவே ஒரு கண்துடைப்பு நாடகமாக அதிகார வர்க்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அக்கிராமத்தைச் சேர்ந்த நான்கு தாழ்த்தப்பட்டவர்களைத் தேர்ந்தெடுத்து, கடந்த டிச. 14 அன்று அவர்களைப் பாதுகாப்போடு கோவிலுக்குள் அழைத்துச் சென்று, இப்பிரச்சினைக்கு மங்களம் பாடியது, அதிகார வர்க்கம். எனினும், யாருமே எதிர்பாராத வண்ணம், அக்கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் கோவிலுக்குள் நுழைந்து, தங்களின் உரிமையை நிலைநாட்டினர்.

இந்தக் கலகத்தால் ஆடிப் போன பார்ப்பன பூசாரிகள், உடனடியாக ஆலயத்தைவிட்டு வெளிநடப்பு செய்தனர். மேல்சாதி வெறியர்கள் சாதிக் கூட்டம் போட்டு, தீண்டாமையை இன்னும் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தீர்மானம் போட்டனர். ஜகந்நாதர் கோவில் தீட்டுப்பட்டு விட்டதால், சிறப்பு பூஜை செய்து, ஆலயத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்றது பார்ப்பனக் கும்பல். தாழ்த்தப்பட்டோரின் ஆலய நுழைவை எதிர்க்கும் முகமாக சுற்று வட்டார கிராமக் கோவில்களில் பூசைகள் நிறுத்தப்பட்டன. மேலும், உண்ணாவிரதம், ஊர்வலம் என நடத்தி, மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைப் பீதியில் ஆழ்த்தினர்.

இப்படி வெளிப்படையாகவே தீண்டாமையைக் கக்கிய மேல்சாதி வெறியர்கள் அனைவரையுமே, வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்க வேண்டும். ஆனால், அரசோ ஆதிக்க சாதி வெறியர்களைக் காப்பாற்றும் முகமாக சமாதானக் கூட்டம் போட்டது. இக்கூட்டத்தில், தாழ்த்தப்பட்டோர் இக்கோவிலுக்குள் நுழைவதை இனி தடை செய்ய மாட்டோம் என மேல்சாதிவெறியர்கள் ஒத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. சமாதானக் கூட்டத்தின் இந்த முடிவு ஒரு நாள் கூத்தா, இல்லையா என்பது போகப் போகத் தெரிந்துவிடும்.

கேரேதகடா சம்பவம் விதிவிலக்கானதல்ல; நீதிமன்றத் தீர்ப்புக்கு பிறகும் கூட, கண்டதேவி கோவில் தேரின் வடத்தைத் தொடுவதற்குத் தாழ்த்தப்பட்டோரை, மேல்சாதி வெறியர்கள் அனுமதிக்க மறுக்கின்றனர். கர்நாடகாவில் உள்ள பதனவாலு கிராமத் தாழ்த்தப்பட்டோர் ஆலயம் நுழையும் உரிமை கேட்டுப் போராடியதால், மேல்சாதி வெறியர்களால் தாக்கப்பட்டு, மூன்று பேர் கொல்லப்பட்டனர். இவை வெளியுலகுக்குத் தெரிந்த சம்பவங்கள். கிராமங்களுக்குள்ளேயே புதையுண்டு போனவை எத்தனையோ?

தாழ்த்தப்பட்டோரின் ஆலய நுழைவையடுத்து, ஜகந்நாதர் கோயிலின் முன்பு குவிக்கப்பட்டுள்ள போலீசு.



"உனக்குக் கடவுள், மதம் வேண்டும் என்றால், உன்னை இழிவுபடுத்தும் இந்து மதத்தில் இருக்காதே" என்றார், பெரியார். அம்பேத்கர் இந்து மதத்தில் இருந்து வெளியேறி புத்த மதத்தைத் தழுவினார். தங்களை ஒதுக்கி வைக்கும் பார்ப்பன சநாதன 'இந்து' மதத்தை, தாழ்த்தப்பட்டோர் புறக்கணிப்பதை தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களுள் ஒன்றாகப் பயன்படுத்த முடியும். இப்புறக்கணிப்பை, மத உரிமை இழப்பாகப் பார்க்க முடியாது. ஏனென்றால், ஒவ்வொரு தீண்டாமைத் தாக்குதலும், "இந்து" என்பது ஒரு மதமல்ல. அதுவொரு சாதிப் படிநிலை அமைப்பு என்பதைத்தான் திரும்ப திரும்ப எடுத்துக்காட்டுகிறது!